தெல்லிப்பளை

## திருமகள் சனசமூக நிலையம்

# வெள்ளி விழா மலர்

**9.8.1956 — 9.8.1981**



"பணிபுரி பலனை எதிர்பாராதே"

"Service is the Duty. Trust is not Concern."

**9.8.1981**

892
575

## முக்கிய அறிவித்தல்

**பொதுநூலகம் வலிகாமம் வடக்கு பிரதேச சபை**

நீங்கள் எடுத்துச்செல்லும் புத்தகத்தில் கீறுதல், வெட்டுதல், கிழிதல், அழித்தல், அழுக்குப்படியவிடல் மற்றும் ஊறுபாடுகள்களைச் செய்ய வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறோம். புத்தகங்களை நீங்கள் எடுக்கும் பொழுது இப்படியான குறைபாடுகளைக் கண்டால் நூலகப்பொறுப்பாளருக்கு உடன் தெரிவிக்கவும். அல்லாவிடின் நீங்கள் எடுத்துச் சென்ற புத்தகம் நல்ல நிலையில் இருந்ததெனக் கருதப்படுவதுடன், ஊறுபாடுகளுக்கு நூலகப் பொறுப்பாளரினால் விதிக்கப்படும் தண்டத்தை நீங்கள் ஏற்கவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படும்.


D

D

ஸ்

கொழும்பு-11.

தொலைபேசி: 25929

பொது சன நூலகம். தெல்லிப்பழை.
சேர்வு எ
வகுப்பு எ
99/575



எமது நிலையத்தின் முன்றலில் இருக்கும் அருள்மிகு கவளாவத்தை ஞானவைரவர் ஆலயத்தின் முகப்புத்தோற்றம்.

575

# ஆசிச்செய்தி

தெல்லிப்பளை கிராமசபை
விசேட ஆணையாளர்

திருமகள் சனசமூக நிலையம் வெள்ளிவிழா கொண்டாட இருக்கும் செய்தி எமக்கு அளவற்ற மகிழ்ச்சியை தருகின்றது. வெள்ளிவிழா மலர் திருமகள் சனசமூக நிலையம் ஆற்றிய கலை, சமூக தொண்டுகளின் அறிக்கையைச் சுமந்து வரும்போது எமது ஆசிகள் அம்மலரில் இடம் பெறுவது எமக்குப் பெருமையளிக்கிறது. எங்களால் வழங்கப்பட்ட நன்கொடைகளை உரியகாலத்தில் எடுத்து தங்கள் பணிகளை சிறப்புற செய்தமை மற்றைய சனசமூக நிலையங்களுக்கு ஒரு உதாரணமாக அமையும் என்பதில் ஐயமில்லை. கலை, கலாச்சார, சமூகசேவைகளுடன் உடல் நலம் பேணும் விளையாட்டுத்துறையிலும் தங்கள் சங்கம் மேலும் வளர எனது உள்ளம் நிறைந்த ஆசிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

கே. மகாதேவா
விசேட ஆணையாளர்
தெல்லிப்பளை கிராமசபை.

கிராமாட்சி மன்றம்,
தெல்லிப்பளை,
24-6-81.



# ஆசிச்செய்தி


கௌரவ அ. அமிர்தலிங்கம் அவர்கள்
பாராளுமன்ற உறுப்பினர்
எதிர்க்கட்சி முதல்வர்.


காங்கேசன்துறைத் தொகுதியிலுள்ள தெல்லிப்பளை கிழக்குக் கிராமத்தில் சிறப்புடன் இயங்கிவரும் சனசமூக நிலையம் கடந்த 25 ஆண்டுகளாக மக்களுக்கு ஆற்றிவரும் சேவை யாவரும் அறிந்ததே. இந்த நிலையம் தனது 25-வது ஆண்டு பூர்த்தியைக் கொண்டாடவிருக்கும் இவ் வெள்ளி விழா சகல நிலைகளிலும் சிறப்புறுமென்பதில் ஐயமில்லை.

திருமகள் சனசமூக நிலையம் சமூகத் தொண்டுகளில் முன்னின்று செயல்படுவதும், விளையாட்டுத்துறைகளில் போட்டிகளை நடாத்திவருவதும் கட்டுரை பேச்சுப்போட்டிகளை ஏற்படுத்தி மக்களின் சமய வளர்ச்சி, உடல் வளர்ச்சிகளுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து வருவதையும் தனது பணியாகக் கொண்டுள்ளது. மக்களின் அறிவை மேம்படுத்தும் நோக்கமாக பத்திரிகைகளைத் தருவித்து, உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்களை மக்கள் அறிந்து கொள்ளும் பணியிலும் செயல்பட்டு வருகின்றது.

இந்நிலையம் மென்மேலும் தனது பணிகளைத் திறம்பட நடாத்தி பொன் விழா காணவேண்டுமென உளமார விரும்புகிறேன்.

வெள்ளிவிழாவின்போது வெளிவரும் மலர் சிறப்புற என் இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்.

**அ. அமிர்தலிங்கம்** பா. உ.
எதிர்க்கட்சி முதல்வர்

# ஆசிச்செய்தி

யாழ். பிரதேச உள்ளூராட்சி

உதவி ஆணையாளர்


திரு. அன்ரன் அல்பிரட் சி. ஏ. எஸ். அவர்கள்

தெல்லிப்பளை கிராமத்தில் கடந்த இருபத்தைந்து வருடங்களாகப் பல்வேறு சமுதாயப் பணிகளையும் ஆற்றி வரும் திருமகள் ச. ச. நிலையம், சனசமூக நிலைய இயக்கத்திற்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழ்ந்து வருவதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பொதுமக்கள் பயன்பெறத்தக்க வகையில் சிறந்த ஒரு வாசிகசாலையை நடாத்திவருவதுடன், கலை, கலாச்சாரம், விளையாட்டுத்துறை போன்றவற்றிலும் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டுவருகின்றனர். வேலையற்றிருக்கும் இளைஞர்கள், யுவதிகளுக்கு உதவும் நோக்குடன் சிறு கைத்தொழில் ஆரம்பிக்கும் முயற்சியில் இச் சனசமூக நிலையத்தினர் ஈடுபட்டு வருவதனை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

அன்ரன் அல்பிரட்
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
யாழ்ப்பாணம்

பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.



# ஆசிச்செய்தி

திரு. யூ. பி. விஜேகோன் அவர்கள்,
யாழ் மாவட்ட அமைச்சரும்

தம்பதெனிய
பாராளுமன்ற உறுப்பினரும்.

தெல்லிப்பளை திருமகள் சனசமூக நிலைய வெள்ளி விழா மலர் வெளியீட்டிற்கு எனது ஆசிச் செய்தியை வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். திருமகள் சனசமூக நிலையம் தெல்லிப்பளை கிழக்கு, விராங்கொடைக் கிராமத்தில் வாழ் மக்கட்கு சமய, கலாச்சார, மெய் வல்லுனர் போட்டிகள் பலவற்லும், சிறப்பாக உதைபந்தாட்டப் போட்டிகளிலும் வெற்றி ஈட்டி, பெரும் பணியாற்றி வருகின்றதென்றும், பல சிரமதானப் பணிகளில் ஈடுபட்டுள்ளது என்பதையும் அறிந்து நான் பெருமைப்படுகின்றேன். நாட்டின் நலன் நமது நலனெனப் பேணி எதிர்வரும் சந்ததியினரை வழி முறைப்படுத்தும் பணியில், இச் சனசமூக நிலையம் நீண்டு நிலைக்கவேண்டுமென்று வாழ்த்துகின்றேன், வணங்கின்றேன்.

யூ. பி. விஜேகோன்

அபிவிருத்தி செயலகம்,
யாழ்ப்பாணம்.
30-7-81.



# ஆசிச்செய்தி

திருமகள் சன–சமூக நிலையத் தலைவர்
திரு. தா. திசைவீரசிங்கம் அவர்கள்

எமது நிலையம் 1956-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு இன்று வெள்ளி விழா கொண்டாட உள்ளது. தொடங்கும் பொழுது சிறுதொகை அங்கத்தவரைக்கொண்டதாக இருந்து இன்று நூற்றுக்கணக்கான அங்கத்தவர்களுடன் திகழ்கின்றது. இவ் அங்கத்தவர்களில் பலர்கௌரவ ஆயுட்கால அங்கத்தவர்களாகவும், ஆயுட்கால அங்கத்தவர்களாகவும், சாதாரண அங்கத்தவர்களாகவும் உள்ளனர்.

தெல்லிப்பழை கிராம சபையின் கீழ் இயங்கும் நிலையங்களில் முதலாம் பிரிவைச் சேர்ந்த ஒரு சில நிலையங்களுள் எமது நிலையமும் ஒன்று என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.

எமது நிலையம் சிரமதானப் பணியில் ஈடுபட்டு பல கைங்கரியங்களைச் செய்துள்ளது. சமயப் பணியிலும் எம்மவர் பங்கு பற்றத் தவறவில்லை. விளையாட்டுத் துறையில் எமது வாலிபர்கள் மிகுந்த ஆர்வமுள்ளவர்கள் வலி வடக்கு சமாசம் - யாழ் மாவட்ட சனசமூக சமாசங்களின் போட்டிகளின் பங்கு பற்றிப் பல பரிசில்களைப் பெற்றுள்ளார்கள் என்பதை அறியத்தருவதுடன் எமது நிலையக் கீர்த்தியை மேலும் உயர்த்தியமைக்கும் யான் அவர்களை மனப்பூர்வமாக வாழ்த்துகின்றேன்

மகாஜனக் கல்லூரியின் மேற்பார்வையில் எமது நிலையத்தின் ஓர் பாலர் பாடசாலை 1977-ம் ஆண்டு தொடங்கப்பட்டு இருவருடங்கள் நடாத்தப்பட்டது. தற்போது எமது ஆசிரியை பிற ஊர் சென்றதாலும் அவ்விடத்தை நிரப்ப பயிற்றப்பட்ட ஆசிரியை இன்மையால் நிறுத்த வேண்டிய துப்பாக்கியம் ஏற்பட்டதை மிகுந்த வருத்தத்துடன் கூறுகின்றேன்

எமது அங்கத்தவப் பெரியார் சிலரின் பெருமுயற்சியால் இந்நிலயத்தில் பல முன்னேற்றங்கள் ஏற்பட உள்ளன. என்பதை மிகுந்த மகிழ்சியுடன் கூறுகின்றேன்.

தா. க. திசைவீரசிங்கம்



# ஆசிச்செய்தி

தெல்லிப்பளை,
திருமகள் விளையாட்டுக் கழகத் தலைவர்
திரு. கி. கனகநாயகம் அவர்கள்.

எம் மன்றத்தின் வரலாற்றினை, அதன் பணிகளை, செயல்பாடுகளை சித்தரிக்கும் பொன் மலரான இம்மலருக்கு என் கனிவான ஆசிகளை அளிக்கிறேன்.

எம் மன்றம் ஆரம்பமான காலம் தொடக்கம் இதன் பணிகள் மிகவும் போற்றக்கூடிய விதத்தில் அமைந்துள்ளது. இச்சுற்றுடலில் உள்ள இளைஞர்கள் சிறந்த விளையாட்டு வீரர்களாக திகழ இம் மன்றம் அளப்பரிய பணிகளை ஆற்றியுள்ளது. இளைஞர்கள் மிகவும் கட்டுப்பாடாகவும், சண்ணியமாகவும், கடமையுணர்வுடனும் தாம் பங்குபற்றும் சகல விளையாட்டுக்களிலும் சிறப்பான புகழைப்பெற இம்மன்றத்தின் செயலாளரும் ஏனைய செயற்குழு உறுப்பினர்களும் அயராது உழைத்து அரும் சேவையாற்றியுள்ளார்கள் என்பதனை இவ்வேளையில் எடுத்துரைக்கவேண்டியது எனது கடமையாகும். வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுப்போட்டிகளில் எமது கழகம் உதைபந்தாட்டம், கிறிக்கட் (மென் பந்து) மெய்வல்லுனர் போட்டிகளில் வெற்றிக் கேடயங்களைப் பெற்றுக்கொண்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இச்சுற்றுடலில் வாழும் மக்கள் எம் மன்றத்திற்கு என்றும் உதவியும் ஊக்கமும் அளித்துவந்துள்ளார்கள். அவர்களது உதவிக்கும் பணிசளுக்கும் எம்மன்றத்தின் சார்பில் அன்பான நன்றிகளைக் கூறுகிறேன்.

இறுதியாக இன்றுபோல் என்றும் நம் மன்றம் சீரும் சிறப்பும், பேரும், புகழும் பெற்றுத் திகழ்ந்திட அனைவரின் ஒத்துழைப்பையும் வேண்டி என் இனிய வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

வணக்கம்.

*With the Best Compliments*
*of*

# RAJESWARI BRAMIN HOTEL & STORES

(Opposit Fort Railway Station)

**PURE VEGETARIAN DIETS**

**GROCERIES GRAPES & BOOK SELLERS**

69, Olcott Mawatha,

COLOMBO 11.

Phone: 25939

வெள்ளிவிழா இனிது நிறைவேற எமது வாழ்த்துக்கள்

# ராஜேஸ்வரி பிராமண ஹோட்டல் அன் ஸ்டோர்ஸ்

(கோட்டை புகையிரத நிலையத்திற்கு எதிரில்)

சுத்தமான சைவ ஆகாரத்திற்கு எம்மிடம் விஜயம் செய்யுங்கள்

குரோசரி வகைகளும் கிரேப்ஸ் முதலியனவும் புத்தக வியாபாரமும்

69, ஒல்கட் மாவத்தை,

கொழும்பு 11.

தொலைபேசி: 25939



# ஆசிச்செய்தி

திருமகள் சனசமூக நிலைய
கௌரவ செயலாளர்
வைத்தியகலாநிதி
நா சத்திவேல் அவர்கள்

அன்புடையீர்,

எல்லாம் வல்ல பரம் பொருளின் திருவருளால் எங்கள் சனசமூக நிலையம் வளர்ச்சியடைந்து இன்று 25 ஆவது ஆண்டுப் பூர்த்தி விழாவைக் கொண்டாடும் இவ் வேளையில் இந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவர்க்கும் எனது மனமார்ந்த நன்றி உரியதாகுக.

எமது சனமூக நிலையம் எங்கள் கிராமத்தவர்களின் பெரு முயற்சியால் 1956 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. திருவாளர்கள் வி. இராசா, மு. ஐயாக்குட்டி, க. த. வல்லிபுரம் என்னும் பெரியார்கள் முன்னணியில் நின்று உழைத்தனர். அவ்வாண்டு ஆவணி மாதம் 9 ம் திகதி மாலை பெரியகலட்டி வைரவர் கோவில் மூன்றலில் திரு. வி. இராசா அவர்கள் தலைமையில் முதற் கூட்டம் ஆரம்பமானது. அப்பொழுது திரு. மு. தம்பியையா அவர்கள், திருமகள் சனசமூக நிலையம் என்று பெயரிட வேண்டும் எனப் பிரேரிக்கச் சபை அதனை ஏற்றுக் கொண்டது. அப்பெயரே இன்னும் நிலவுகின்றது.

திரு. மு. ஐயாக்குட்டி அவர்கள் இந்நிலையத்துக் காணியை அன்பளிப்பாகக் கொடுத்துதவி ஆதரவு தந்தார்கள் திரு. நா. குமாரசுவாமி அவர்கள் தனது செலவில் கட்டிடத்தைக் கட்டிக் கொடுக்க முன் வந்தார். 2. 10. 56 இல் அத்திவாரம் இடப்பட்டுக் கட்டிடம் எழுந்தது. அவ்வாண்டிலேயே கட்டிடம் பூர்த்தியடைந்ததும் உயர் நீதிபதி திரு. பொன் ஸ்ரீஸ்கந்தராசா அவர்களால் 15. 9.57 இல் திறந்து வைக்கப்பட்டது. அப்பொழுது யாழ்மாவட்ட அரசாங்க அதிபதியும் வாழ்த்துரை வழங்கினர்.

இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவுக்கு அப்பொழுது சுகாதார மந்திரியாக விருந்த கௌரவ A. G. ஜெயசூரியா அவர்கள் பிரதமவிருந்தினராகக் கலந்து விழாவைச் சிறப்பித்தார் தொடர்ந்து எல்லா ஆண்டுகளிலும் நிறைவு விழாக்கற் முறையாக நடைபெற்று வருகின்றன.

1963 ஆண்டு சித்திரை மாதம் 28 ஆம் திகதி ஆழிக் குமரன் ஆனந்தன் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்ததொரு வெற்றிக்காக ஒருவரவேற்பு விழா வைத்து ஒரு பொற் கிழியும் வழங்கிக் கௌரவித்து அனுப்பினோம்.

எமது நிலையமானது சமய சேவை, சமூக சேவை சிரமதான சேவைகளில் பெரிதும் அக்கறை காட்டி வருகிறது. கடந்த ஒன்பது வருடங்களாகத் தொண்டைமானாறு

செல்வச்சந்நிதித் தேர் உற்சவத்தின் போது பஜனைப் பாத யாத்திரைப் பவனி நடைபெற்று வருகிறது. அன்பர்கள் பலர் அதிற் கலந்து ஊக்கம் காட்டி வருகின்றனர். ஆண்டு தோறும் வரவரப் பக்தர்கள் கூட்டி வருவது எம் எல்லோருக்கும் உற்சாகத்தை ஊட்டி மகிழ்விக்கும் செய்தியாகும் இந் நிலையத்தில் நவராத்திரி போன்ற சமய விழாக்களும் சிறப்பாக நடாத்தப்படுகின்றன.

எமது நிலையத்தின் முன்பாகக் கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் கவளாவத்தை ஞான வைரவர் ஆலயத்தில் நடைபெறும் சகல உற்சவங்களிலும் வெள்ளிக் கிழமைதோறும் நடைபெறும் கூட்டுப்பிரார்த்தனையிலும் எமது அங்கத்தவர்கள் கலந்து அரும்பணியாற்றி வருகின்றனர்.

கிராம ஒழுங்கைகள் துப்புரவு செய்தல், வெள்ளப் பாதிப்புப் பகுதிகளைச் சீர் செய்தல், நடை பாதைகளைப் பெருப்பித்தல் முதலான சிரமதானப் பணிகளிலும் நாம் ஈடுபட்டு வருகின்றோம்.

இலவச இராப்பாடசாலை ஒன்று தொடங்கிச் சிறப்புடன் நடாத்தப்பட்டு வந்தது. மிகவும் சமீபத்தில் ஆசிரியர் வசதியீனம் காரணமாக வகுப்புகளைத் தற்காலிக நிறுத்தம் செய்துள்ளோம் கூட்டிய சீக்கிரம் வகுப்புகளைத் தொடர்ந்து நடத்த முயற்சி எடுக்கிறோம்.

அரசாங்கச் செயற்றிட்டத்தின் கீழ் 1. 1. 77ல் மகா ஜனக்கல்லூரி மாணவர்களின் உதவியோடு அதிபர் பொ. கனகசபாபதி அவர்களால் பாலர் வகுப்பு நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

1964 ஆம் ஆண்டு யாழ் மாவட்ட சனசமூக நிலைய சமாசம் நடாத்திய விளையாட்டுப் போட்டியில் எமது நிலையத்தின் சார்பில் பங்குபற்றிப் பல பரிசில்களை நமது அங்கத்தவர்கள் பெற்றுக் கொண்டனர் அன்று தொட்டு யாழ் மாவட்டத்தில் நடைபெறும் அநேக போட்டிகளில் குறிப்பாக உதைபந்தாட்டம், கரபந்தாட்டம் மென் பந்தாட்டம் முதலிய போட்டிகளிலும் எமது நிலையம் பங்குபற்றிப் பல பரிசில்களைப் பெற்றுள்ளது.

விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்படும் போட்டிகளிலும் பங்குபற்றி வருகிறோம். கடந்த வருடம் (1980) உதைபந்தாட்டம், மென்பந்தாட்டம் இரண்டிலும் வெற்றிக்கேடயம் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வருடம் நடாத்தப்பட்ட போட்டியிலும் வெற்றிக் கேடயம் பெற்றுள்ளோம் ஓட்டப்போட்டியிலும் இரண்டாம் இடம் எமது நிலையத்துக்கே கிடைத்தது.

எமது நிலையத்திற்கு விளையாட்டு மைதானம் சொந்தமாக இல்லாதது பெருங் குறையாகும் அதற்கும் அரசாங்கத்தின்மூலம் காணிபெற ஒருங்குகள் செய்து வருகிறோம். கூடிய சீக்கிரம் எமது எண்ணம் பூர்த்தியாகும் என நம்புகிறோம்.

இந் நிலையத்துக்குப் பல பிரமுகர்கள் பல விதத்திலும் வேண்டியபோதெல்லாம் உதவிபுரிந்துள்ளார்கள். மனம் நோகாது தாராளமாக உதவி செய்யும் இவர்கள் தொண்டு தொடர்ந்தும் இருக்க வேண்டுமென வாழ்த்துகிறோம்.

நடப்பு வருடத்திலும் எமது நிலையம் மென் மேலும் பல பணிகளைச் செய்வதற்குத் திட்டமிட்டுள்ளோம். வேண்டிய நேரங்களில் அன்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்குமென எதிர்பார்க்கிறோம்.

மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இச்செய்தியை பூர்த்தி செய்கிறேன்.

வைத்தியகலாநிதி நா. சத்திவேல்



# ஆசிச்செய்தி

கொழும்புக்கிளை குழு அங்கத்தவர்
திரு. பொ. தங்கராசா அவர்கள்

1981-ம் ஆண்டு ஆவணித்திங்கள் 9-ம் திகதி, தனது 25 ஆண்டுகள் பூர்த்தியாகி வெள்ளிவிழா எடுக்கும், தொன்மை புகழ் தெல்லிப்பளை கிழக்கு திருமகள் சனசமூக நிலையத்திற்கு ஆசிகள் பல கூறி, நிலைய செயற்குழுவில் பணியாற்றிய வகையாலும் அதன் கொழும்புக்கிளையின் அங்கத்தவன் என்பதாலும் எனது வாழ்த்துக்களை அனுப்ப வல்ல வைரவப் பெருமானின் சித்தம்.

எங்கள் கிராமத்திற்கு ஒரு வாசிகசாலை இல்லாப் பெருங் குறையை நாம் சிறுவர்களாக இருந்த 1950 - 55 - ல் உணர்ந்து யாம் செயற்பட்டு கை கூடாத் இப்பெரும் பணியை சில பெரியார்களின் நன்முயற்சியால் எமக்கொரு நிலையத்தை அமைத்துத் தந்த தாராள சிந்தையும் பெருமனமும் படைத்த திருவாளர்கள் காணி வழங்கிய மு. ஐயாக்குட்டி கட்டடம் அமைக்க முழுப்பணமும் உதவிய நா. குமாரசுவாமி, கட்டடத்தை அமைத்து நிலைய முதல்வராக வழி காட்டிய வி. இராசா, இவர்களோடு ஆக்கமும் ஊக்கமும் அழித்த அப்போதைய செயற்குழுவிற்கும் (அமரர் ஆனோர் உட்பட) கடந்த சில ஆண்டுகளாக இதன் வளர்ச்சியில் பங்கெடுத்து ஊக்கம் அளிக்கும் அங்கத்தவர்கள் பலருக்கும் நன்றிகள் பல கூறி, நிலையம் மேலும் முன்னேறி அதன் இலட்சியங்கள் பல அடைய முன்னின்று இயங்கும் செயற் குழுவுக்கும் எனது மனமுவந்த ஆசிகள்.

நிலையம் மேலும் வளரட்டும்

தபால் தலைவர் விடுதி,
அஞ்சல் அகம்,
பொலன்னறுவை, 23.7.81.

இங்ஙனம்
பொ. தங்கராசா.

With the best compliments

of

# ANJALA PRINTERS

209, Kathiresan Street,

COLOMBO - 13.

Telephone : 22944

# எமது நிலையச் செயற்குழுவினர்

## 1981



இருப்பவர்கள் : இடமிருந்து வலம்.

பொ. சிவகுமார் (பொருளாளர்) கி. கனகநாயகம் (உப தலைவர்) க. திசைவிரசிங்கம் (தலைவர்) டாக்டர் நா. சத்திவேல் (கௌரவ செயலாளர்) நா. வேலாயுதபிள்ளை.

நிற்பவர்கள் : இடமிருந்து வலம் :

மு. வரதராசா, சி. கிருஷ்ணநந்தம், அ. கொட்லின், வ. நித்தியானந்தம், ந. செல்வச்சந்திரன்.

படத்தில் இல்லாதவர் : வி. தவராஜசிங்கம்



திரு. நா. குமாரசாமி அவர்களின் தந்தை
திரு. நாகமுத்து அவர்கள்



தந்தையின் ஞாபகார்த்தமாகக்
கட்டிடம் நன்கொடையாக சட்டித்தந்த
திரு. நா. குமாரசாமி அவர்கள்



எமது நிலையத்திற்குக்
காணியை நன்கொடையாகவழங்கிய
திரு. மு. ஐயாக்குட்டி அவர்கள்

# சனசமூக நிலையமும் சமூகமும்

சமூகங்களை ஒன்றிணைக்கும் ஸ்தாபனங்களில் சனசமூக நிலையம் மிகமிக முக்கிய மானது. ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டால் பாடசாலை, நூல் நிலையம், ஆலயம், சனசமூக நிலையம் ஆகிய இவைகள் எவ்வளவு வளர்ச்சி அடைந்துள்ளனவோ அந்த அளவிற்கு அக்கிராம மக்களும் அறிவு ஞானம் இவைகளை வைத்தே காணப்படும் (சனசமூக நிலையம் தனித்து பத்திரிகைகள் வாசிப்பதிலும், வானொலி கேட்பதிலும் மட்டும் நின்றுவிடாது சமூக சேவைகளை மேற்கொள்ளவேண்டும்.)

சமூகசேவை என்பது நாம் சற்று விரிவாகச் சிந்திக்கவேண்டும். சனசமூக நிலை யங்கள் தனித்து படித்தவர்களுக்கு மட்டும்தான் பயன்படுத்தப் படுவதாக பொதுவாகக் கருதப்படுகின்றது. கிராமத்தில் உள்ள சாதாரண பாமர மக்களுக்கு அறிவு பெருக்கும் நிலையமாக அமையவேண்டும். விவசாய மக்களுக்கு, விஞ்ஞான விவசாயத்திற்கான அபிவிருத்திக்கான கருத்தரங்குகளை ஏற்படுத்துதல் சமூகக் குறை பாடுகளை நீக்கி சமூக ஒற்றுமை, சமத்துவம், சமாதானம், சுகவாழ்வு இவைகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மனித சுகாதாரம். பொருளாதர முன்னேற்றம் இவைகளை வளர்ப்பதன் பொருட்டு கருத்தரங்குகளை ஏற்படுத்துதல் கலந்துரையாடல், வளர்ச்சியடைந்த நாடுகளின் இலங்கையில் இருக்கும் தூதரகங் களைத் தொடர்புகொண்டு சமூக முன்னேற்றம், கைத்தொழில் வளர்ச்சி, ஆகியன வற்றிற்கு உதவும் சஞ்சிகைகளை இலவசமாகப் பெற்று சனசமூக நிலைய வாசகர்க ளுக்கு மேலும் அறிவு வளர்ச்சியைத் தூண்டுதல் இப்பொழுதுகூட கிராமமக்க ளிடையே பாடசாலையை விட்டு சிறு வயதில் வெளியேறியபின் புத்தகங்களையோ, பத்திரிகைகளையோ வாசிப்பதில் அக்கறைகாட்டப்படுவதில்லை. அதற்கும் போதிய காரணங்கள் இல்லாமல் இல்லை. வாழ்க்கையை நடாத்தக்கூடிய போதிய வருவாய் இல்லை. இதனால் ஏற்படும் பல பிரச்சினைகளை எதிர்நோக்குவதனாலும் வறுமைப்பிணி யினால் சிக்குண்டு மெலிவதினாலும் மன நிம்மதியற்ற முறையில் வாழும் மக்கள் சன சமூக நிலையங்களை அணுக நேரமும் இல்லை. நாட்டமும் இல்லை. அப்பேற்பட்ட மக் களை கண்டிப்பாகப்போக சனசமூக நிலையங்களுக்கு அழைக்கவேண்டும். அவர்களுக்கு மேற்கூறிய பொது அறிவை ஏற்படுத்தவேண்டும். அதன்மூலம் அவர்களின் கஷ்ட நிலையில் இருந்து விடுபட சில வழிவகைகளை அவர்கள் அறிந்துகொள்ள வாய்ப்புக் களை ஏற்படுத்திக்கொள்ளமுடியும். இது மட்டும் அல்ல. கிராமத்தில் சிறு கைத் தொழில், கோழிப்பண்ணை வளர்ப்பு முறை, பால்பண்ணைப் பசுக்களை வளர்ப்பதன் முறைகள், தினி இடுதல், நோய்த் தடுப்பு முறைகள், அதிக அளவு பால் கறவைப் பசுக்களை உற்பத்தி செய்யும் முறை இவைகளை சமூக மக்கள் இலகுவான முறையில் அறியச் செய்யும்பொருட்டு சனசமூக நிலையங்கள் செயல்படவேண்டும். இதைவிட சன சமூக நிலைய நிர்வாக அங்கத்தினர்கள் சமூகத்தொண்டு செய்யும் இயல்புடையவர்க ளாகவும், ஒழுக்கசீடர்களாகவும், நடந்துகொண்டால்தான் சனசமூக நிலையங்களை உற்று நோக்கும். அதன் மூலம் சனசமூக நிலையமும், சமூகமும் ஒன்றிணைந்து வளர்ச்சியுறும். சனசமூக நிலைய நிர்வாகிகளாக இயங்கிவரும் உறுப்பினர்கள் குறிப்பாக இளைஞர்கள், கல்வித் தராதரம் மட்டும் இருந்துவிட்டால் போதாது. சமுதாயத்தில் உள்ள சிக்கல் களையும் பிரச்சினைகளையும் அறியவேண்டும். அதற்கு சனசமூக நிலையங்கள் வாய்ப்பு அளிக்கின்றன. சனசமூக நிலையத்தில் நிர்வாக உத்தியோகத்தராக இயங் கும் ஓர் இளைஞன் சனசமூக நிலைய வளர்ச்சிக்காக உழைக்கும்போது தானும் வளர்ச்சி அடைகிறான்; அனுபவரீதியான நிர்வாக செயல்களைக் கற்றுக்கொள்கிறான். சமூக நன்மதிப்பைப் பெறுகின்றான். அதன்மூலம் சமூகசேவை நற்சான்றுகள் அவன் பெற் றுக்கொள்ளும் வாய்ப்புகள் ஏற்படுகின்றன. எத்தனை இளைஞர்கள் சனசமூக நிர்வாகி

களாகி இருந்த காரணங்களினால் அரச தனியார் துறை நிர்வாகங்களில் வேலைபெற்று திறமையான நிர்வாகிகளாகத் திகழ்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக நேர்மை, உண்மை, கடமை, பொறுமை, திட்டமிட்டபடி செயலாற்றல் இவைகளை சனசமூக சேவைகளில் ஈடுபடுவோர் கடைப்பிடிக்க வேண்டும். எங்கள் நாட்டிலே எத்தனையோ சனசமூக நிலையங்கள் தோன்றின. குறிப்பிடத்தக்க சனங்கள் நன்கு செயல்பட்டன. உள்ளூர் ஆட்சிமன்றங்களின் மானியங்களைப்பெற்றன. ஒரு சில சனசமூக நிலையங்கள் தரமுயர்த்தப்பட்டன. பின்பு அது இருந்த இடம் தெரியாமற்போய்விட்டன. நிர்வாகிகள் மத்தியில் ஏற்பட்ட போட்டிகள், பூசல்கள் இவை ஒரு சில கிராம மக்களிடையே நன்பதிப்பைப் பெருமையாலும் தனிநபர் தான்தோன்றிதனமான நிர்வாகச் சீர்கேடாலும், ஒருசில அரசியல் கட்சிகளின் போட்டியாலும் சீர்குலைந்துள்ளன. மேற்கூறிய காரணங்களைவிட சில நன்கு இயங்கிவந்த சனசமூக நிலையங்களை எடுத்துக் கொண்டால் பேரளவில் நிர்வாகம் இயங்கினாலும் தனித்தொரு நிர்வாக உத்தியோகத்தரால் அவரின் அயராத உழைப்பினால் அவரினது தனிப்பட்ட செயல்பாட்டினால் இயங்கி அவரது நாமத்தால்மட்டும் வளர்ந்தவை. அவர் தொழில் காரணமாகவோ அல்லது வேறு காரணங்களாலோ வெளியேறினால் அந்நிலையம் செயற்படாது போவதை நாம் காண்கிறோம். இது நிர்வாகத்திலுள்ள எல்லோரினதும் செயற்பாட்டால் நடைபெற்றால் இப்படியான ஓர் நிலை ஏற்படமாட்டாது. இன்னுமோர் பாரதூரமான விளைவை நாம் அனுபவரீதியாக கண்டுள்ளோம். ஒரு சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் உத்தியோகத்தர் தெரிவு நடைபெறும் பொழுது இரு கோஷ்டிகளாகப் பிரிந்து நின்று நிர்வாக உத்தியோகத்தர்களைத் தெரிவார்கள். இதில் தாங்கள் நினைத்தவர்களை நிர்வாகத்தில் தெரிவுசெய்ய முடியாது போன சிலர் அந்நிலையத்தினால் எடுக்கப்படும் நன் முயற்சிகளுக்கு எதிர்ப்பிரசாரம் செய்து எதிர்செயற்பாட்டில் இயங்குவார்கள். இதனால் ஊரே இரண்டுபடுவதுமட்டும் அல்லாமல் சனசமூக நிலையம் அழிந்தொழிந்துவிடும். போட்டிகள் இருக்கலாம், ஆனால் பொறாமையாக மாறி பொறுமை இழந்து வறுமை தேடிக்கொள்ளாது சனசமூக நிலையம் எமது சமூகத்தின் இரு கண்கள் எனப் பேணிப் பாதுகாத்து வளர்ப்போம். சமூக முன்னேற்றம் காண்போம். மக்கள் தங்கள் மூட நம்பிக்கைகளைப் போக்கி அறிவை வளர்ப்போம் என திடசங்கற்பம் பூணுவோமாக.

ந. செல்வச்சந்திரன்
தெல்லிப்பளை கிழக்கு,
தெல்லிப்பளை.

# எமது விளையாட்டுக் கழகச் செயற் குழுவினர்

## 1981




இருப்பவர்கள் : இடமிருந்துவலம் :

சி. கிருஷ்ணாநந்தம், பொ. சிவகுமார், கி. கனகநாயகம் (தலைவர்)
டாக்டர் நா. சத்திவேல் (கௌரவ செயலாளர்) த. தருமகுலசிங்கம்

நிற்பவர்கள்: இடமிருந்துவலம் :

பொ. நந்தகுமார், வ. நித்தியானந்தம், அ. ஜெயக்குமார்.
படத்தில் இல்லாதவர் : ஈ. பரமேஸ்வரன்.

# கொழும்புக்கிளை குழு உறுப்பினர்




கொழும்புக்கிளை குழு அங்கத்தவர்
திரு. பொ. தங்கராசா அவர்கள்



எமது கௌரவ உறுப்பனரும் ஆயுட்கால அங்கத்தவரும் சமாதான நீதிபதியும் உத்தியோகப் பற்றற்ற நீதிவானுமாகிய
திரு. சி. சுந்தரலிங்கம் அவர்கள்



கொழும்புக்கிளை குழு அங்கத்தவர்
திரு. ஏ. கந்தசாமி அவர்கள்



கடந்த 3 வருட காலமாக கொழும்புப் பகுதி தனைகாரியாக சிறப்பாகச் செயலாற்றிவரும்
திரு. த. குணரத்தினம் அவர்கள்



கொழும்புக்கிளை குழு அங்கத்தவர்
திரு சி. தனபால அவர்கள்

உயர்ந்த ரகம்! நிதான விலை!!

**நவநாகரீக புடவைகளுக்கும்**

மற்றும்

**கூறை வகைகளுக்கும்**

*Dealers in:*

சிறந்த ஸ்தாபனம் **TEXTILES & FANCY GOODS.**

# ஜெயராம்ஸ் JAYARAMS

16, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம். **16, K.K.S. Road, Chunnakam**

*Branch:* **JAYAGOWRI.** 5, New Market, Chunnakam.

ஜெயகௌரி, 5, புதிய மார்க்கட், சுன்னாகம்

---

## MAYURA

## &

## GIL GARMENTS

★ **Shirtings** ★ **Suitings**

# LINGAM'S SILK HOUSE

18, Model Market, Power House Road, JAFFNA.

Telephone: 7684

**CUSTOMERS SATISFACTION IS OUR AIM.**

தரமான சகல விதமான
அலுமினியப் பாத்திரங்கள்
எம்மிடம் உண்டு

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்

# மாவை மெற்றல் இன்டஸ்றீஸ்

கே. கே. எஸ். வீதி, மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை

---

★ ஜெம் பிராண்ட் கற்பூரம்

★ கோழித்தீன் வகைகள்

# பரா இன்டஸ்றீஸ்

இணுவில் றோட்,
மானிப்பாய்

தொலைபேசி: 5 5 3

உ

சிவமயம்

# ரி. விஜயரட்ணம் அன் பிரதர்ஸ்

கொழும்பு பிரபல புகையிலை வியாபாரி

167, செட்டியார் தெரு

கொழும்பு 11.

தொலைபேசி: 27214

தெல்லிப்பழை
திருமகள் சனசமூக நிலையத்தின்
வெள்ளிவிழா நடைபெறுவதை
வாழ்த்துகின்றோம்!

**திருமகள் ஸ்டோர்ஸ்**

காங்கேசன்துறை வீதி,
தெல்லிப்பழை.

---

"வெள்ளி விழா பொன் விழாவாகட்டும்"

தரமான திரைப்படங்களைக்
காண்பித்து வருகிறார்கள்!

**"துர்க்கா சினிமா"**

தெல்லிப்பழை.

## My Best Friend

*I have many friends. Of these my best friend is Rani. Rani and I are classmates. We study at mahajana college Tellippalai. We are in Grade 8 and we both are of the same age.*

*Rani is very good in her studies. She always gets the highest marks in class. Her favourite Subjects are Mathematics and English. She helps me much with my studies. Rani is not only good in her studies, but is also good in sports. In the interhouse sports meet held in our school last term she carried away most of the prizes. She is an excellent net ball player too and is a member of the school's junior team.*

*Rani is very popular with her friends. For not only is she talented but is also kind and generous. She is always ready to help anyone.*

K. Jeya Gowry

Grade 8, Mahajana College.

---

## Spot

*Spot is our family pet dog. He was a homeless, stray pup. One rainy morning we heard a pup whimpering at our door step. When we opened the door, we found a pup all wet and cold. We took him wiped him clean and dry and gave him a saucer of warm milk which he drank greedily. We named him spot and adopted him.*

*Now spot is two years old. He is a faithful Companion and a good watch dog. He will not let any strangers enter the house. At night he is very alert. The slightest sound is enough to make him bark. When we family members leave home he comes to the gate to send us off and when we return he gives us a warn welcome. He loves to play, go for walks, eat bones and drink milk. One thing he dislikes is to have a bath. Nevertheless he is given a bath, once a week.*

*All at home love spot and in return he watches over our home and protects us.*

T. Parimalakanthy

Grade 7, Mahajana-College.

## விற்பனைக்கு

❁ யூனியன் & யேல் கதவுப் பூட்டுகள்
ரூ. 225/- முதல் 300/- வரை

❁ செம்பு டியூப்புகள், Twyford English
வர்ண & வெள்ளை பாத்.

❁ அலுமீனிய பூ தகடுகள்
(Aluminium Diamond Sheets) 5' x 3' & 8' x 3' ரூ. 290/-

❁ M. S. ஆங்கிள் ஐயன் 3/4' x 3/4' x 1/8'
ரூ. 100/-

❁ M. S. ஹெக்ஸகனல் நட்டுகள் எல்லா அளவுகளிலும்

இறக்குமதியாளர்கள்: வியாபாரிகளுக்கு சலுகை உண்டு.

# றம்சன்ஸ் ஹார்ட்வெயர் என்டர்பிரைஸ் லிமிடெட்

443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு–12.

# மொழியும் ஆசிரியனது பணியும்

நா. ஆனந்தராசா

( ஆசிரியர், கஞத்துறை சென். ஜோன்ஸ் மகாவித்தியாலயம் )

மொழி என்ருல் என்ன என்பதை விளங்க, சில மேற்கோள்களையும் அதன் நோக்கையும் கொண்டு ஆராயலாம். தமிழிலே "மொழியப் படுவது மொழி" என்பர். "Lingua" என்ற இலத்தீன் சொல்லிலிருந்தே "Language மொழி" என்ற சொல் ஏற்பட்டது Lingua (லிங்குவா) என்பது நாவைக் குறிக்கும். நாவினல் பேசும் பேசும் பேச்சு மொழிக்கே ஸ்திரம் அளிக்கப்படுகிறது. அதனுற் போலும் மொழியின் உயிர் வாய்க்கும் செவிக்குமிடையே உள்ளதென்றும், எழுது கோலுக்கும் கண்ணுக்கும் இடையே இல்லை யென்றும் கூறுவர்.

"புலன்களால் உணரப்படும் குறியீடுகள் கொண்ட மொழி" என்று டாக்டர் வரதராசன் கூறுகிருர். புலன்களால் உணரப்படுவது மொழி என்பதற்கு வள்ளுவன் குறளும் சான்று பகருகிறது.

"கண்ணெடு கண்ணேக்கின் வாய்ச் சொற்கள்
என்ன பயனும் இல."

மொழி என்பது ஒருவர்க்கொருவர் நேரே நின்று கருத்தை உணர்த்தப் பயன் படுவதாகும் நேரே நின்று கருத்தை உணர்த்த முடியாத போது ஏற்பட்ட கருவியே இலக்கியம். மொழி எண்ணங்களையும், கருத்துக்களையும், மனவெழுச்சிகளையும் வெளிப் படுத்தப் பயன்படுகிறது - என்ற பேராசிரியர் ஜெஸ்ப்பசனின் கூற்றும் மொழி மட்டில் தெளிவை ஏற்படுத்தும்.

மொழியின் தோற்றம்பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உண்டு. கடவுள் தந்த தமிழ் என்று நம்மவர்கள் மட்டுமல்லாது. எகிப்தியர் சீனர், கிரேக்கர், ஸ்கண்டி நேவியா முதலாஞேரும் கூறுவர் மற்ருேரு கொள்கையினர், கடவுள் சகலத்தை யும் ஆக்கினுர் மனிதனே அவற்றிற்குப் பெயர் வைத்தான் என்பர்.

அனைவற்றிற்கும் மொழியுண்டு. பிராணிகள்; அவை பாவனை மூலம் மரபு வழியில் அறிகின்றன. பூனை எலிபிடிக்கத் தனது பெற்ருேரிடமிருந்து கற்கிறது. பிள்ளை பாவனை மூலமும், மரபு வழியில் பெறும் கற்றலுடன், ஒன்மை ஆக்கத்தால் பல மொழித்திறன் களை அடைகிறது. மனிதனுடைய மொழிககும் மற்றும் சீவராசிகளின் மொழிக்கும் நாலு வேறுபாடுகள் உண்டென்பர்.

(1) மொழியாற்றல் (விளங்கும், விளங்கப்படுத்தும் ஆற்றல்)
(2) நியாயிக்கும், சக்தி (இனங்காணல்)
(3) சமூகப் பயிற்சி (மதித்தல், இணங்குதல்)
(4) கையைத் தேவைக்குத்தக உபயோகித்தல்.

இவைகளை விருத்தியுறச் செய்தலே, பிள்ளை பூரண ஆளுமை பெற வழி வகுப்பதாகும்.

மொழி மக்களால் வளர்க்கப்படும் கலை. அது மக்களை வளர்க்கும் கலை. ஆதலாலே அது மக்களின் ஆசிரியனும், மாணவனுமாகிறது மக்கள் மொழியைப் பேசாவிடில்

மொழியில்லை. இறைவன் மனிதனைப் படைக்க,மனிதன் மொழியைப் படைத்தான். மொழி அவனை முன்னேற்றியது. ஆதி மக்களுக்குப் புல வளர்ச்சியும் இருந்தது. அறிவு வளர்ச்சியில்லை. பேசக்கற்றுச் சொற்களைப் படைத்த பின்பே, அறிவு வளர்ச்சி ஏற்பட்டது. அச்சுயந்திரம் வந்த பின் இவ்வளர்ச்சி மிகத் துரித மடைந்தது.

மனிதன் கருவிசெய்யும் பிராணி, அவன் ஆக்கிய கருவிகளில் மிகமிக முக்கிய மானது மொழியாகும். மொழியென்னும் கருவியில்லையேல், வேறெந்தக் கருவிகளையும் மனிதன் கண்டு பிடித்திருக்க முடியாது. மொழியே மற்றைய கருவிகள் கண்டு பிடிப்பதற்கு மூலக்கருவியாகும். மொழியெனும் கருவி இல்லையெனில், அவன் கண்டுபிடிப்பு அவனோடு அழிந்து விடும். உலகு அக்கண்டு பிடிப்பை இழந்து விடும்.

மொழியின்றிச் சமுதாயம் இன்றுள்ள நிலையை அடைந்திருக்க முடியாது. மொழி சமுதாய அமைப்பைக் காட்டும் கண்ணாடி, வா, வாரும், வாருங்கள் என்ற சொற்கள் சமுதாய மட்டிலே மக்கள், மற்றவர் மட்டில் காட்டும் சால்பை விளக்குகின்றன. மன வெழுச்சிகளைக் காட்டுவதும் மொழியே. காலிலே கல்லடித்து விடின் நாசமாய்ப்போன கல் என்கிறோம். வீதியால் போகும் பொழுது நாய் கடித்துவிடின் குறுக்காலே போன வர்களுக்கு நாயைக் கட்டி வளர்க்க முடியாதா? என்கிறோம் இவ்வாறு எமது உணர்வைக் காட்டுவது மொழியேயாகும்.

மொழி சிந்தனையை வளர்க்கிறது. பல சொற்களைத் தனது எண்ணத்தோடு தொடர்பு படுத்தித் தெரிவிக்க முனையும் போது சிந்தனை ஏற்படுத்துகிறது. ஒருவனுடைய நுண்மதியை அளவிடுவதில் மொழி முக்கிய இடம் வகிக்கிறது மொழி விருத்தி ஒருவனைச் சூழலுக்கேற்ப வாழ வழிவகுக்கும். பார்வை குறைந்த பிள்ளைகள் பித் போக்குடையவர்களாகக் காணப்படுகிறார்கள். இதனால் மொழித் திறனில் ஒன்றான கேட்டலின் முக்கியத்துவம் அறியலாம். ஒரு பிரச்சினையை நன்றாக விளங்குவதற்கும், விளக்குவதற்கும் தம்முன் இல்லாதவற்றை அநுமானம் செய்வதற்கும், கருத்துக்களை ஞாபகப் படுத்தவும் மொழி உதவுகிறது. ஆசிரியர் தன் கடமையை ஆற்ற உதவுவதும் மொழியேயாகும்.

குழந்தை மொழியால் வளர்கிறது அதன் மொழி ஆய்வு மொழியியல் பற்றிய அடிப்படை உண்மைகளை விளக்கும் அதற்குப் பிறக்கும் போதே பேசும் ஆற்றல் இருந்தாலும், அது உடனே பேசாது. குழந்தையின் மிக விருப்பமான விளையாட்டுக் கருவி நாக்கு எனப் பேராசிரியர் ஜெஸ் பாஸன் கூறுகிறார். குழந்தை நாவை அசைத்து ஒலி எழுப்பி மகிழ்கிறது. தாய் தன் நாவையசைத்துக் குழந்தை முன்னிருந்து தாலாட்டுப் பாடுவது குழந்தையின் பிற்கால மொழி வளர்ச்சிக்குப் பெருந்துணைசெய்கிறது.

குழந்தை பிறப்பு முதல், பாடசாலை சேரும்வரை வீட்டிலோ அன்றேல் பாலர் கழகங்களிலோ பயில்கிறது. இலங்கையில் இன்று அனேக பாலர் கழகங்களும் "மொண்டி சோறி"ப் பாடசாலைகளும் ஆங்காங்கே தோன்றுகின்றன. இத்தகைய அநேக கழகங்களில் எவ்வித பயிற்றற் பயிற்சியும் உளநூலறிவும் அற்ற, சி. பா. த. அன்றேல் க. பொ. த. பத்திரப் பரீட்சைகளிற் சித்தி யெய்தியவர்கள் கற்பிக்கிறார்கள். இவற்றால், அநேக பிள்ளைகளின் ஆக்கத்திறனும் தனித்துவமான வளர்ச்சியும் பாதிக்கப்படுகின்றன. அங்கு பயிலும் பிள்ளைகளை நன்கு அவதானிக்கும் பெற்றோர்களாலும், மற்றோராலும் இக்குறைபாட்டைக் கண்டு கொள்ள முடியும். மொண்டி சோறிப் பயிற்சியில் விசேட பயிற்சி பெற்றவர்கள் இத்தகைய இளைஞரைப் பயிற்றி விடின், சிறாரின் தன்மையும், தகவுமறிந்து தம்மை மாற்றிக் குழந்தைகளுடன் சேர்ந்து, நல் வழி காட்ட இத்தகைய கழகங்களிலே கற்பிப்பவர்களால் முடியும்.

குழந்தையின் சொற் களஞ்சியத்தைப் பல' உளவியலாளர்களும், அறிஞர்களும் கணிக்க முயன்றனர். அவர்களின் ஆய்வு கிட்டத்தட்ட ஆறுவயதுப் பிள்ளை 2500

சொற்களை அறிந்திருக்கும் எனக் காட்டுகிறது. எனவே கிட்டத்தட்ட 2500 சொற்களை அறிந்த பிள்ளை, முதலாம் வகுப்பிற்கு வருகிறது எனக் கொள்ளலாம்.

குழந்தை அறிந்திருக்கும் சொல் சூழலுக் கேற்ப வேறுபடும் வானொலி கேட்கும் பிள்ளைக்கும் வீட்டில் வசதியற்ற பிள்ளைக்கும் சொற் களஞ்சியத்தில் வேறுபாடு காட்டும். ஆதலாற்போலும் நல்ல சூழலை அமைப்பதே கல்வியின் நோக்கம் என்கின்றனர். குழந்தைகளுக்கு கல்வி போதிக்கும் ஆசிரியர், குழந்தை மொழி பற்றி அறிந்தாலே, திறமாக நல் வழி காட்டமுடியும். குழந்தையை விளங்க, விளக்க, பழக, அவர்களுக்கேற்ற இலக்கியங்களை ஆக்க, அவர்களது பாடப்புத்தகங்களை எழுத, ஆசிரியருக்கு குழந்தை மொழி அறிவு அவசியம். குழந்தை மொழியில் பேசும் ஆசிரியரைக் குழந்தைகள் விரும்புவர் குழந்தையின் ஆர்வ விடயங்கள், வழக்கள் ஆதியன அவர் அறிந்து அதற்கேற்றபடி வழிகாட்ட முடியும்.

இன்று ஆரம்ப வகுப்புகளிலே புதிய கல்வித்திட்டம் நடை முறைப்படுத்தப்பட்டு வருகிறது. இது முன்பு கையாண்ட முறைகளை ஓரளவு விடுத்துப் புதிய முறையிலே எல்லாப்பாடங்களையும் ஒருங்கிணைத்துக் கற்பிக்க முயல்கிறது. இதிலே மொழியாசிரியரின் பங்கு மிக முக்கியமானது. ஏனெனில் மொழியே எல்லாப் பாடங்களுக்கும் வாகனமாய் அமைகிறது. தமிழ் மொழி கற்பித்தல் பற்றிய ஆய்வு குறைவாக இருப்பதனால் ஆசிரியர் மொழி கற்பித்தலில் புதிய கல்வித்திட்டத்தின் நோக்கை அறிந்து செயலாற்ற வேண்டும். இக்கல்விதிட்டம் கல்வியைக் கருத்துள்ளதாக்கவும், பிள்ளையின் தனித்துவத்தை வளர்க்கவும், பிள்ளை தானே கற்கவும் தூண்டுகிறது.

கல்வி வாழ்க்கைக்கு என்பதை எல்லோரும் ஏற்கின்றனர். வாழ்க்கையில் பாவிக்கப்படும் மொழி மிக முக்கிய மடைகிறது "யுனெஸ்கோ" ஸ்தாபனத்தாரின்

நான் கேட்கிறேன்
மறந்து விடுகிறேன்
நான் பார்க்கிறேன்
ஞாபகமிருக்கிறது
நான் செய்கிறேன்
விளங்கிக் கொள்கிறேன்
நான் கண்டு பிடிக்கிறேன்
சந்தோஷமடைகிறேன்

என்ற கூற்றுக்களும் நவீன கல்வித் திட்டத்துடன் தொடர்புடையது.

மொழி கற்பிக்கும், பிள்ளை தானே செய்து மொழித்திறன்களைக் கண்டுபிடித்து இன்பமடைய வழிகாட்ட வேண்டும். ஆரம்ப வகுப்பிலே கேட்டல் என்று மொழித்திறனை ஏற்படுத்தச் சூழலை அவதானிக்க விடலாம். வீதியால் செல்லும் ஊர்வலங்களை நினைவுறுத்தி நடைபெறும் நிகழ்ச்சிகளின் வித வித சத்தங்களைப் பற்றி மாணவர்களைக் கேட்கலாம் இதே போன்று மறைவிலிருந்து பல விதமான சத்தங்களைச் செய்து அவற்றை இனங்காண விடலாம். இவ்வாறே மற்றுந் திறன்களான பேச்சு, வாசிப்பு, எழுத்து என்பவற்றிற்கும் ஏற்ற செயல் முறைகளைக் கொடுக்கலாம்.

இவ்வாறு எழுதும்போது, ஆசிரியர் சூழலுக்கு அடிமையாவது என்பதைக் காட்டாது. ஆசிரியர் பிள்ளையின் சூழலை அறிந்து சூழலுடன் சேர்ந்து, சூழலில் இருந்து பிள்ளைமொழித் திறன்கள்பெற வழிகாட்டவேண்டும். சூழலை ஆசிரியர் ஒழுங்குற அமைப்பதுடன் தேவையானவிடத்து மாற்றங்களைப் புகுத்தி பிள்ளை ஆற்றலுள்ள மொழியறிவு பெற வழிப்படுத்தல் வேண்டும். ஆசிரியரிடம் அனுப்பப்படும் பிள்ளைப்பேச்சு மொழியில் வித்தியாசப்படுவர். வீட்டிலே அவர் பெற்ற அனுபவத்திற்கேற்பச், சில பிள்ளைகள் சிக்கல்

வாக்கியங்களையும் பேசும் என்பதை ஆசிரியர் மறுக்கக்கூடாது. மொழிபயிற்றும் ஆசிரியர் பிள்ளையின் பேச்சுமொழியை அவதானிக்கவேண்டும். அவதானம் பிள்ளைக்கு வேண்டிய தனியுதவி, அல்லேல் வகுப்புக்கு வேண்டிய பொது உதவி அளிக்க வழி வகுக்கும்.

பிள்ளை சுயமாகக் கருத்துத் தெரிவித்தலை ஆசிரியர் வரவேற்கவேண்டும். ஆனால் ஆசிரியர்களிற் பலர் பிள்ளைகளின் பேச்சு மொழியில், பிழை, பிழை எனப் பிழை பிடிப்பவர்களாகக் காணப்படுகிறார்கள். ''குறை கண்டால் கொடுமையான குற்றம், நிறை கண்டால் தேவையான ஆசி'' என்பதை மறந்துவிடுகிறார்கள். பிள்ளை பிழை விடும் இடமே பிரச்சினை ஏற்படுத்தித் தொடங்குமிடமாதல் வேண்டும். வகுப்பிலே ஆசிரியரோ அல்லேல் பிள்ளைகளா அதிகம் கதைக்கிறார்கள் என்று வினவினால் ஆசிரியரே அதிகம் கதைக்கிறார் என்ற விடை வரும். பிள்ளையின் பேச்சிலே தனித்தன்மையை ஏற்படுத்தவேண்டிய ஆசிரியர் பிள்ளை சுயமாகக் கருத்தை வெளியிட வழி வகுக்கவேண்டியவர், தன் கருத்தைத் திணிக்க முயல்வதும், பிள்ளையைப் பேசவிடாது தடுப்பதும் தவிர்க்கப்படவேண்டும்.

இன்றைய கல்வி விரும்பும் தனித்துவத்தைப் பிள்ளையிடம் வளர்க்க, ஆசியர் உதவியாளர் ஆதல்வேண்டும். பிள்ளையின் கண்டுபிடிப்புக்களை, பிள்ளையின் ஆக்கபூர்வமான மொழித் திறன்களை ஆசிரியர் நயத்தல் வேண்டும். மொழிப்பாடம், மற்றவற்றுடன் ஆரம்ப வகுப்பில் இணைக்கப்பட்டு, சுயமான மொழி வெளிப்படுத்தலைப் பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகியவற்றில் ஏற்படுத்தவேண்டும். பிள்ளையின் உள்ளாற்றல்களை வெளிக்கொணர்வதே கல்வியெனப்படுகிறது. பிள்ளையிடம் கருத்தை உட்திணிப்பதல்ல. பிள்ளைகள் பாவனை மூலமும், ஒப்புமையாக்கத்தாலும் மொழியைக் கற்கிறார்கள் என்பதை உணர்ந்து வழி காட்டவேண்டும். பிள்ளை அறிந்த சொல்லிலிருந்து புதிய சொற்களை ஆக்க முனையும் போது வரவேற்று அத்திறனைச் சரியாக வழிப்படுத்தல்வேண்டும். தனித்தன்மை வளர்க்கப்படின், பிள்ளை ஆக்கபூர்வமான மொழியறிவு படைத்தவனையும், மொழியறிவால் பல பிரச்சினைகளை தீர்க்கக்கூடியவனையும், வேண்டியவிடத்து ஆற்றலுள்ள மொழியைப்பாவித்து, எண்ணியதை மற்றவருக்கு உணர்த்தி தனது மொழித்திறனையும் வளர்த்து, மற்றவரும் மொழியறிவும், நல்வாழ்வும் பெற வழிவகுப்பான். ஆதலால் பிள்ளை கேட்பதுடன், சுயமாகப் பேசி, பேசியதை விளக்கி, வாசித்து, வாசித்ததை எழுதி, ஒப்புமையாக்கத்தால் மேலும் தனித்துவத்தை வளர்க்க ஆசிரியர் வழிகாட்டவேண்டும்.

# விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வெற்றிக்கேடயத்தைப்பெற்ற எமது கோஷ்டியினர்

# 1981




இருப்பவர்கள் இடமிருந்து வலம்:

எஸ். நந்தகுமார், டாக்டர் என். சக்திவேல் (கௌரவ செயலாளர் வி. க.)
கே.கனகநாயகம் (வி க தலைவர்) என். துஷியந்தன் (காப்டன்), பி நந்தகுமார்

நிற்பவர்கள் இடமிருந்து வலம்:-

ஏ. ஜெயக்குமார், வி. கணேசலிங்கம், எஸ். பத்மநாதன், கே. சிவானந்த வடிவேல்,
ஈ. பரமேஸ்வரன், பி. யோகசிங்கம், ஆர். அரவிந்தன், எஸ். நந்தகுமார்,
கே. குகதாசசிங்கம் படத்தில் இல்லாதவர்: எம். சிவகுமார்.



முதலாவதாக சனசமூக நிலையம் ஆரம்பிக்கவேண்டும் என்று கூட்டம் நடைபெற்ற இடம்
( பெரிய கலட்டி ஞானவைரவர் ஆலய முன்றல் )



1980-ல் வெற்றிபெற்ற உதைபந்தாட்டக் கோஷ்டி.

எனது அன்பளிப்பு

V

வே. கனகலிங்கம்பிள்ளை
அன் சன்

17, புனித யோன்ஸ் வீதி,
கொழும்பு 11.

திருமகள் சனசமூக நிலைய வெள்ளி
விழாச் சிறப்புற எமது ஆசிகள்

## ஸ்ரீ சக்தி வைத்தியசாலை

பார்மணியம் வீதி,
தெல்லிப்பழை.

---

துர்க்காஸ் றெக்கோடிங் (B) பார்

சகல பாடல் பதிவிற்கும்
சுன்னுகத்தில் சிறப்பான ஸ்தாபனம்
T. D. K. MAXELL
மொத்த விற்பனையாளர்களும்

## துர்க்காஸ் றெக்கோடிங் (B) பார்

(சித்திரகலா ஸ்ருடியோ அருகாமை)
இல. 68, K. K. S. வீதி,
சுன்னுகம்

---

சுவைமிக்க சைவ சிற்றுண்டி வகைகள்
தேனீர், கோப்பி வகைகள், மசால
உணவுப் பண்டங்கள் உடனுக்குடன்
சூடாக பெற்றுக்கொள்ளவும் ஓடர்கள்
குறித்த தவணையில் செய்துகொள்ள
வாருங்கள்.

## முருகன் விலாஸ்

" சைவ ஹொட்டல் "
அம்பனை, தெல்லிப்பழை.

---

திருமகள் சனசமூக நிலைய
25 வது ஆண்டு விழா சிறப்புற
வாழ்த்துகிறோம்.



இல்லத்தரசிகளின்
இல்லங்கள்
இன்புற்றிருக்க
நாடுங்கள்

## வசீகரன் ஸ்ரோர்ஸ்

தெல்லி – கிழக்கு
தெல்லிப்பழை.

# திருமகள் சனசமூக நிலையம் ஆரம்பித்தவழிகளும் இக் கிராமவளர்ச்சிக்கு ஒத்துழைப்புத்தரும் தொண்டர்களும்

உலகம் போற்றும் நாடுகள் பல உண்டு, அதில் மிகவும் சிறிய கவர்ச்சி மிக்க அழகான ஓர் புனிதமான நாடு எங்கள் தாய் நாடு அதுதான் சிறிலங்கா நாடு ஆம் அழகான இந்த நாட்டிலே மக்கள் இரண்டாகப் பிரிக்கப் பட்டுள்ளனர். ஆனாலும் இந்த சிறிலங்கா நாட்டின் தலைவர்கள் ஒருவரே இந்த நாட்டை ஆளும் பலத்தைப் பெற்றுள்ளனர்.

இந்த இரட்டைப் பிரிவினையாக்கப் பட்ட இனத்தவர்கள் ஒவ்வொரு பிரிவினை யாக வாழ்கின்றார்கள். அவர்கள் தமிழர்கள் சிங்களவர்கள் ஆம் நாம் தமிழர்கள் நாம் பிறந்த இடம் தமிழிடம் நம் தாய்க்குலம், தமிழ்க் குலம், நமக்கோர் உரிமையுள்ள நகரம் இந்த சிறிய லங்கா நாட்டின் இரட்டையர்களில் தமிழர்களின் நகரம் ஆம் அதுதான் எங்கள் யாழ்நகரம். யாழ் நகரம் தமிழர்களின் தலைநகரம்.

இந்த யாழ் நகரம் மிகவும் அபுர்தமான குழிர்ச்சியுள்ள புனிதமான நகரம் இந்த நகரத்திலே இறைவ ரூபத்தில் அமர்ந்து நகரத்தை மிகவும் புனிதமான நகர மாக வளர்த்து மிகவும் பல பல அற்புதங்களைச் செய்து வருகின்றனர். யாழ் தலை நகரக் குறிச்சியிலே தன்னைத்தானே மிகவும் அழகாக அலங்கரித்து எல்லோரையும் மயக்கிடும் மிகச் செல்வக் குமரனாக நிறையுள்ளான் நல்லைநாதர் நல்லூர் கந்தன், பசியால் உணர்விழந்து உருக்குலைந்து நிற்கும் ஜீவன்களுக்கும் மதியால் நடை இழந்து நிலைகுலைந்து நிற்கும் ஜீவன்களுக்கும் தன் அற்புதத்தால் மகிழ்ச்சியூட்டிக்காக்கிறான், தொண்டைமானாறு செல்வச் சந்நிதி அன்னக் கந்தன்.

இந்த சிறிலங்கா நாட்டில் வாழ்ந்த முன்னோர்களாலும் இன்னோர்களாலும் மிகவும் அற்புதமாக புனிதமான இடமாக வர்ணிக்கப்பட்டு வருகின்றன. யாழ் நகர்க் கரை ஓரத்தில் அமைந்து இருக்கும் கீரிமலை புனித ஸ்தலம். ஆம் கீரிமலை ஓர் புனித மான ஸ்தலம்.

இந்திய தென்னாட்டின் அரசகுமாரிக்கு ஓர் முனிவரின் சாபத்தால் அவளின் மனித முகம் மாறி குதிரை முகமாகப் பட்டதால் அந்த நோயை இந்தியாவிலே எந்த ஒரு வைத்தியராலேயோ, மந்திர சக்தியாலேயோ மாற்ற முடியவில்லை. இதனால் இராசகுமாரி மிகவும் கவலைப்படடுக் கொண்டே இருந்தாள். ஒரு நாள் அவரின் உறக்கத்தில் ஓர் கனவு உதித்தது. அக்கனவின் விபரங்களை அறிந்த அரசர் இராஜ குமாரியின் கனவில் உதித்த அந்த இடமாகிய இந்த சிறீலங்கா நாட்டிலே யாழ் நகர்க் கரை யோரத்தில் அமைந்திருக்கும் இந்தக் கீரிமலைக்கு இராஜகுமாரியை அனுப்பிவைத்தார். இராஜகுமாரி இவ்விடத்துக்கு வந்ததும் தன் கனவில் உதித்த அவ்விடமே. இவ்விடமாக இருக்கிறது என்பதை கண்டதும், தான் பக்தியால் வணங்கி வந்த இறைவனை பிரார்த்திக்கலானார்.

இந்த புனித தீர்த்தத்துக்கருகிலே தங்கி இருந்து நாள் இரு வண்ணமாக அந்தத் புனித தீர்த்தத்தில் நீராடி, கீரிமலை தீர்த்தக் குளத்துக்கு அருகாமையில் அமைந்திருந்த இந்த ஆலயத்தைக்கண்ட இராஜகுமாரிக்கு மிகவும் மனமகிழ்ச்சி இந்த ஆலயத்தில் அமர்ந்து இருக்கும் இறைவன் தான் மிக மனமாக பயபக்தியோடு நித்தமும் வணங்கி வரும் தெய்வம் முருகன், நீராடி இந்த ஆலயத்துக்கே நித்தமும் வந்து வணங்கலானார்.

மிகப்புனிதமான தீர்த்தத்தின் மகிமையாலும் நித்தமும் வணங்கி வரும் இறைவன் முருகனின் அருளாலும், முனிவரின் சாபத்தால் படர்ந்து இருந்த குதிரைமுக நோய் நீங்கி உலகம் போற்றும் மிக அழகான இளவரசிக் கேற்ற மானிட பெண் முகமாக பெற்றுள்ளார்.

சாபத்தால் தனக்கு நேர்ந்த இந்தக் கடும் நோயையும் பிணிகளையும் நீக்கி அருளிய கீரிமலை புனிதநீர் ஸ்தானத்தை உன்னதமான ஓர் புனிதமான நிலையம் என்று உலகம் எங்கும் பரப்பி விட்டார்.

சரித்திரத்தில் புகழ் பெற்ற புனிதமான கீரிமலை கிராமத்துக்கு அருகாமையில் இருக்கும் கிராமம்தான் தெல்லியூர் கிராமம், ஆம் இந்தக் கிராமத்தின் முளுப் பெயர் தெல்லிப்பழை இந்த சிறிலங்கா நாட்டில் யாழ் நகரத்திலே மிகப் பிரபல்யமான கிராமங்களில் ஒன்றுதான் இந்தத் தெல்லியூர் கிராமம்.

இன்று இந்த நாட்டிலே தெல்லியூர் கிராமத்தின் வளர்ச்சியின் நிலையை எல்லோரும் வாளும் தமிழ் மக்களின் தலைவனும் அவர்களின் தமிழ் தந்தையாகவும் மூதறிஞனாகவும் தந்தை செல்வா ஆகவும், உலகத்தமிழ் தலைவர்களில் ஒருவனுமாகிய எங்கள் அமரர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் பிறந்த மண்தான் இந்தத் தெல்லியூர் கிராமம்

இந்த சிறீலங்கா நாட்டிலே பலபல ஆலயங்கள் உண்டு ஒரு நாமத்தில் பல ஆலயங்களும் உண்டு. ஆனாலும் இந்த நகரத்திலே ஒரே ஒந நாமத்தில் ஒரே ஒரு ஆலயம் ஒரு சிறு குடிசையில் இருந்தது, அந்த ஆலயம் இருந்த அடுத்த கிராமத்தில் உள்ளவர்களில் சிலருக்கு அந்த குடிசைக்குள் என்ன ஆலயம் இருக்கிறது, என்பது தெரியாமல் இருந்துவந்தது.

ஆனால் இப்பொழுது ஒரு சில ஆண்டுகளுக்குள், அந்த ஆலயம் எல்லோரும் அதிசயிக்கும் வகையில் ஓர் பிரபல்யம்வாய்ந்த நிலையில் உள்ளது.

அதற்குக் காரணம் அக்கிராமத்தில் உள்ள அவ் ஆலயத்தின் மேல் மிகப்பற்று உள்ளவர்களும், பக்தர்களும், அக்கிராமத்தைச் சுற்றியுள்ள வேறு சில கிராமத்துத் தொண்டர்களும் தான் அவ் ஆலயத்தின் வளர்ச்சிக்குக் காரணம். அந்த ஆலயங்களிலே வருடத்தில் சிலசில தினங்களிலே நடைபெறும் விஷேசமான பூசைகளும் விஷேச திருவிழாக்களும்தான். ஆனாலும் இந்தக் தெல்லியூரில் எழுந்திருக்கும் இந்த ஆலயத்தில் என்றென்றும் சனத்திரளாகவே காணபடும் வாரத்தில் ஒரு நாள் அது எந்தநாள் அதுவா செவ்வாய்க்கிழமை அ...ப் ப...ப்...பா அப்பாடா அன்று அடேயப்பா என்ன நெரிசல், என்ன நெரிசல் என்ன மோதல் என்ன உதைகள் ஈடு செல்ல முடியாமல் திரண்டு நிற்கும் சனத்திரள் நாலா பக்கமும் பெரு வெள்ளம் போல் கூடிநிற்கும் மக்கள் கூட்டங்கள்.

திரண்டு வந்து நிற்கும் எல்லா மக்களின் உள்ளத்தை தன் வசமாக்கி தன் தன் அருகில் அழைத்து வைத்து அவர்களுக்கு தாய்க்குத் தாயாகவும், சேய்க்குச் சேயாகவும், நன்பிக்கு நன்பியாகவும், துணைவிக்குத் துணைவியாகவும் அவர் அவர்களுக்கு ஏற்றபடி அருள் கொடுத்து எல்லோர் மனதிலும் என்றும் மறையாத பக்தியைக் கொடுத்துள்ளாள் எங்கள் பக்திவாய்ந்த உலகநாயகி தெல்லியூர் துர்க்கைநாயகி உலகம்தோறும் புகழ் மணக்கும் எங்கள் அருள்மிகு புகழ் மணக்கும் முதல் இடத்தைப்பெற்றுள்ளாள் தெல்லியூர் கிராமத்து துர்க்கை அம்மாள்.

தெல்லியூர் கிராமத்தில் "சிறு" "சிறு பிரிவுகளாக" பிரித்து குட்டிக் கிராமங்கள் இருக்கின்றன. அக்குட்டிக் கிராமத்தில் ஒன்றுதான் பிராங்கொடை என்ற சிறு கிராமம் அக்கிராமத்தில், உள்ள முன்னோர்களால் சூட்டப்பட்ட செல்லப் பெயர் தான் பிராங்

கொடை என்ற பெயர் இக் கிராமத்தில் உள்ள வாசிகள் உயர்ந்த தொழில் துறையிலுள்ளவர்களாகவோ உயர்ந்த செல்வந்தர்களாகவோ அன்று இருந்ததில்லை. இவ் வாசிகள் மிகவும் சாதாரண நிலையில் மிக நேர்மையாகவும், தொண்டர்களாகவும், தர்ம செயலாளர்களாகவும் இருந்து வந்தனர். இக்கிராமத்தின் உயர் நிலை அன்று மிகவும் ஓர் குறிகிய நிலையாக விளங்கி வந்தது, ஆனாலும் அயல் கிராமத்தின் மத்தியில் இக் கிராமம் ஓர் உயர் நிலையைப் பெற்று வந்தது.

அதாவது ஒரு சிறு பாடசாலை இக்கிராமத்தில் அமைந்துள்ளது. இப்பாடசாலை ஓர் அமெரிக்கன் மிசன் பாடசாலையாக இருந்து வந்தது. இக் கிராமத்தில் உள்ளவர்கள் இப்பாடசாலைக்கு கருப்பணிக்கொத்தை என்று, ஓர் செல்லப் பெயரை சூட்டி உள்ளார்கள். அக் காலத்திலே இப் பாடசாலை மிகவும் ஓர் பிரசித்தி பெற்ற பாடசாலையாக விளங்கிவந்தது. இந்தச் சிறிலங்கா நாட்டின் தமிழ் தலைவன் எங்கள் தந்தை அமரர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் கல்வி கற்ற முதல் ஆரம்பப் பாடசாலை இதுதான். இவர் மட்டு மல்ல இக் கிராமத்தில் உள்ளவர்களும் அயல் கிராமத்தில் உள்ள சிலரும் இன்று இந்நாட்டிலே உயர் கல்விமான்களாக விளங்குகிறார்கள். அத்தனைக்கும் ஓர் நிலையமாக இக் கல்வியாலயம் விளங்கி வந்தது.

இக் கிராமத்தில் பிறந்து வளர்ந்து இப்பாடசாலையில் கல்வி கற்று உயர் நிலையில் உள்ளவர்களில், ஒருவர் இப்பாடசாலையிலேயே ஓர் ஆசிரியராக விளங்கினார்.

அவரின் நல்லொழுக்கமும் மாணவர்களின்மேல் மிகவும் அன்பாகவும் அவர்களின் எதிர் காலம், நல்ல உயர் நிலையை அடைய வேண்டும் எனக் கருதி ஓர் நல்ல ஆசிரியராக விளங்கினார். இவ் ஆசிரியரின் திறமையும் ஆற்றலையும் கண்ட அக் கிராம மக்கள் உட்பட அரச நிலையம் இந்த ஆசிரியரை அப்பாடசாலையின் தலைமை ஆசிரியராக நியமனம் பெற்றார். தான் இப்பாடசாலையின் தலைமை ஆசிரியர் மட்டுமல்ல, இக்கிராமத்தின் உயர் நிலை வளர்ச்சியை உண்டாக்க தன்னால் ஆனவற்றைச் செய்யவேண்டும் என்ற நிலையில் இருந்து வந்தார்.

ஆனாலும் ஆசிரியரின் மனதில் ஓர் குறை இப்பாடசாயில் கல்வி கற்கும் மாணவர்களின் எதிர் கால நிலை பாடசாலை படிப்பு மட்டும் போதாது. இந் நாட்டின் நடைமுறை தெரிவுகளும். உலக அறிவுகளும். நன்கு தெரிந்து இருக்க வேண்டும். அடுத்த கிராமங்களின் ஒருசில கிராமங்கள். சில முன்னேற்ற கிராமமாக மாறி வருகின்றன. ஆனால் எங்கள் இக் கிராமமோ கூடிய சீக்கிரம் பிரபல்யமாக்க வேண்டும் என நிலையாக இருந்து வந்தார். இப்படியாக தன் கிராமத்தின் வளர்ச்சிக்காக சிறந்த மனமாக இருந்தவர். மக்களின் அன்புப் பெயர் சட்டம் பியார், அமரர் மூ. தம்பியையா மாஸ்தர் அவர்கள்.

உலகறிவற்ற ஒதுக்குப்புறமாக கூடலாக இருந்துவந்த இக்கிராமம் கொஞ்சம்கொஞ்சமாக விழிப்படையச்செய்தது. இக்கிராமத்தில் பிறந்தவர் இக்கிராமத்தில் வளர்ந்தவர். பாதி நிலையில் அயல் நாடகிய சிங்கப்பூர் நாட்டுக்கே சென்றவர் அந்நாட்டிலே அறிவை வளர்த்தார். அங்கே உயர் பதவியையும் வகித்தார் காலம் கடந்தன. அந் நாட்டு பதவி கடமைகளையும் முடித்து. தன் பொன் நாட்டு தன் பிறந்த கிராமத்துக்கே வந்தார்.

இக் கிராமத்தின் நிலை கண்டு அவரை மிகவும் வருந்தச் செய்தது. அவர் வாழ்ந்த அன்னிய நாடாகிய அந்த நாட்டின் கிராமப்புறங்களின் வளர்ச்சியும் முன்னேற்றமும் உயர் நிலையும் அவரை சிந்தனைக்குள் மூழ்கியது. அங்குள்ள ஒரு சிறு மாணவனுடன் வார்த்தை கலை பரப்பிப் பார்க்கும் பொழுது அம் மாணவனின் அறிவின் பாதி கூட இங்கு இக் கிராமத்தில் உள்ள ஒரு மாணவனிடமாவது நான் காண முடிய வில்லையே

அம் மாணவனின் அறிவின் வளர்ச்சிக்குக் காரணம் கிராமங்கள் தோறும் அமைந்துள்ள பொது ஒய்வுக் கல்விக் கூடங்கள்தான். கிராமத்தில் ஒரு கல்விக் கூடம் இருப்பதால் மாணவர்களின் கல்வி அறிவு வளர்வது பட்டுமல்லாமல், மற்றும் சிறியோர்கள் பெரியோர்கள் அவர்களின், உலக அறிவுகளுககும் பொழுது போக்குக்கும் எவ்வளவு உதவியைக் கொடுக்கின்றன.

ஆம் இக் கிராமத்தில் வளர்ச்சிக்கு முதல் அத்திவாரம் ஓர் பொது சன கல்விக் கூடம் இப்படியாக இக் கிராமத்தின் அவலநிலை கண்டு அதைப் போக்க முன் வந்தவர்களின் ஒருவர் சிங்கப்பூர் பென்சனியர் திரு. வி. இராசா அவர்கள்.

இக்கிராமத்தில் அன்று ஓர் உயர் நிலைக்கு தகுதியுள்ளவர்களாக இருந்த சில பிரமுகர்களின் ஒரு சிலருடன், அதாவது அஞ்சல் தபால் நிலையத்தில் பொறுப்பு வாய்த சேவையாளராக திரு. மு. ஐயாக்குட்டி அவர்கள் கடமையாற்றி வந்தார் இவர் இக் கிராமத்தில் மட்டுமல்ல. இவர் கடமை யாற்றி வந்த அஞ்சல் தபால், நிலையத்துக்குக் கீழ் அடங்கிய சகல கிராமங்களின் இவர் சேவையாற்றிய கிராமத்து மக்கள் எல்லோரும் இவரை மிகப்பண்புள்ள ஓர் சிறந்த சேவையாளர் என்று புகழ்ந்தனர் உண்மையில் இவருடைய மனமே ஓர் பொது நலத் தொண்டர். இவர் தான் சேவையாற்றி வந்த சகல கிராமங்க்ளில் நிலையை அறிந்து பார்க்கும் பொழுது எங்கள் கிராமத்துக்கும் மற்றும் அயல் கிராமத்துக்கும் எவ்வளவோ வேறுபாடாக இருக்கின்றன. அயல் கிராமங்களோ ஓர் முன்னேற்றப் பாதையிலே காண்கின்றேன். எங்கள் கிராமமோ வெளிச்சம் இல்லா ஓர் குகைக்குள் மூழ்கிக் கிடக்கின்றன. என்ற அவலநிலையில் வேதனையாக இருந்தார். இவரின் தியாகமனம் இக் கிராமத்தை ஓர் முன்னேற்றமாக வளர்ச்சியடைந்து நல்ல நிலையில் அமைக்க வேண்டும் என்ற நினைவில் இருந்து வந்தார்.

மற்றும் கொழும்பு மாநகரில் பிரபலமான வர்த்தகர்களில் ஒருவரும் கொம் பனித் தெரு சிவ சுப்பிரமணிய ஆலய தலைவராகவும் தருமத் தொண்டராகவும் விளங்கி வந்த அமரர் திரு. க. த. வல்லிபுரம் அவர்கள் இவர் ஓர் சமூகத் தொண்டர்.

அதாவது இவர் பிறந்து வளர்ந்த கிராமம் இக் கிராமம், இக் கிராமத்து மக்கள் மிகவும் ஏழ்மை உள்ளவர்கள். அவர்களுக்கு ஏதும் அவநிலை ஏற்பட்டு விட்டால் அந்த இடத்தில் இவர் முன்னின்று தன்னால் இயன்ற வழிவகைகளைச் செய்து உதவிபுரிவார்.

முக்கியமாக இக் கிராமத்தில் இவரின் பரம்பரை முதியமாத விளங்கும் ஓர் பகுதியில், ஒரு குடிசையில் ஞானவயிரவர் ஆலயம் இருந்து வந்தது. இந்த ஆலயம் ஓர் புதுமைவாய்ந்த ஆலயமாக அன்று விளங்கியது.

அதாவதுமுதியோர்கள் இன்றும் கூட கூறுவார்கள் இந்த ஆலயம் மிக்வும் அற்புதமான ஆலயம் கண்பார்வை அற்றவர்களையும் கை, கால் ஊன முற்றவர்களையும் பல பிணிகளையும் போக்கி அன்று அருள் புரிந்த ஞான வயிரவர் ஆலயம்.

இப்படியான அற்புதமான இந்த ஆலயம் யாழ் நகரத்திலே, ஓர் ஞானவயிரவர் ஆலயம் பிரகாசமாக இருப்பதை அறிந்தவர்கள் இது ஞான வயிம்வர் ஆலயமா என்று பதகழிக்கும் நிலையில் மிக அற்புதமாக பல பல வர்ன வேலைப்பாடு டன் தன் சொந்த உழைப்பால் இந்த ஆலயத்தை நிறுவியுள்ளார். அமரர் க. த. வல்லி புரம் அவர்கள் அவர்களும் அன்று இக்கிராம வழர்ட்சியின்று நிலை குழைந்து இருப்பதைக் கண்டு மிகவும் வருந்தி வந்தார்.

மற்றும் இக்கிராமத்தின் பிறப்பிடமாகக் கொண்டவரும் இன்று கொழும்பு நகரத்தில் பிரபல வர்த்தககளின் ஒரு வருமாகிய (அமரிக்கன் காட்வெயர் ஸ்டோர் உருமையாலர்) திரு. ந குமாரசாமி அவர்கள்.

இவர் இக்கிராமத்தில் பிறந்து வளர்ந்து கல்வி கற்று இன்று கொழும்பு மாநகரிலே இல்லறம் புகுந்து கடந்த காலம் தொடர்ந்து சிறந்த தொண்டரும் பக்தருமாக விளங்கி வருகிறார். ஆனாலும் அவர்தான் பிறந்த அன்புக் கிராமத்தின் நிலை வளர்ச்சி இன்று மங்கிக் கிடக்கும் ஓர் அவ நிலை எப்படியும் இக் கிராமம் நல்ல நிலைக்கு வளர்ச்சியடைய வேண்டும். அதற்கு தன்னால் உதவி புரிய வேண்டும் என்ற உயர்ந்த மனப்பான்மையுடன் எண்ணத்தை வளர்த்தார்.

ஆனாலும் இவர்களுடைய எண்ணங்கள் வீண் போகவில்லை. இக் கிராமத்தின் வளர்ச்சிக்கும் இக் கிராமத்து எதிர்கால சந்ததிகளுடைய முன்னேற்றப்பாதைக்கும் ஓர் விடிவு காலம் பிறந்தது அன்று.

ஆம் அன்று திரு. வி. இராசா அவர்கள் இக் கிராமத்தின் அவல நிலையைக் கண்டு இதை மேலும் வளரவிடக்கூடாது என்பதை உணர்ந்து இக்கிராமத்தில் உள்ள சில பிரமுகர்களிடம் எடுத்துக் கூற விரும்பினார். திரு. மு. ஐயாக்குட்டி அவர்களும், இன்று அமரராகி இருக்கும் சமூக தொண்டர் திரு. க. த. வல்லிபுரம் அவர்களும் முன்னால் இக்கிராமத்து பாடசாலை தலைமை ஆசிரியர் அமரர் திரு. மு. தம்பிஐயா அவர்களும் பிரபல வர்த்தகர் திரு. நா. குமாரசாமி அவர்களும் இன்னும் இக் கிராமத்திலுள்ள சில பெரியவர்களுடன் இக் கிராமத்தின் எதிர்காலத்தைப்பற்றி எடுத்துக் கூறினார். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் எண்ணங்களில் வளர்ந்து வந்த இக்கிராமத்தின் நிலையை தெரிவு படுத்தினார்கள். திரு. இராசா அவர்களும் தம்பிஐயா மாஸ்டர் அவர்களும் இக் கிராமத்தில் முதல் அத்தியாயமாக ஓர் பொது சனசமூக கல்விக் கூடம் நிறுவ வேண்டும். என்பதையாகும். அதற்கு எல்லோரும் ஆதரவாக ஆமோதித்தார்கள். ஆனால் இந்தக் கல்விக் கூடம் எங்கே நிறுவுவது என்ற குறிக்கோளாக இருந்தது.

இதை உணர்ந்த திரு. ஐயாக்குட்டி அவர்கள் தன் சொந்த முதியமாக இருக்கும் தன் வளவுக்குள் இந்த நிலையத்தை நிறுவுவதற்கு அந்த இடத்தை நன் கொடையாக கொடுப்பதாக. தெரிவு படுத்தினார் இதைக் கேட்ட திரு. நா. குமாரசாமி அவர்கள் இந் நிலையத்தை தன் சொந்த உதவியால் நிறுவித்தருகிறேன் என்று வாக்களித்தார் இதைக் கேட்ட எல்லோரும் மிக மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் அடைந்தார்கள் தம்பிஐயா மாஸ்டர் அவர்கள் இந்த நிலையத்தின் நாமத்தைச் சூட்ட முன் வந்தார். அதாவது மாணவர்களின் எதிர்கால நிலை முக்கியம் கல்வி அந்தக் கல்வியைக் கொடுப்பவர் யார். கல்வித்தாய் அவருக்கு எத்தனையோ நாமங்கள் உண்டு. சரஸ்வதி மகேஸ்வரி திருமகள் குலமகள் இப்படியாக பல பெயர்கள் உண்டு. அதில் திருமகள் என்ற நாமத்தை தேர்ந்து எடுத்துக் கொண்டார். அந்த நாமத்தையே இந்த நிலயத்துக்கு சூட்டும் படியாக கேட்டுக்கொண்டார். அதையும் எல்லோரும் ஏற்றுக்கொண்டார்கள்.

இக் கிராமத்தில் எல்லோரின் மனக்கண் முன் ஒரு கல்வி நிலையம் நிறுவி இருக்கிறதென்று உணர்வாக இருந்து வந்தது. கவளாவத்தை ஞானவயிரவர் ஆலயத்தின் வளவின் பின் பிரபலமான நடைபாதை ஓரத்தில் 1956ம் ஆண்டில் நிலயம் அத்திவாரம் இட்டு கட்டிட வேலைப்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டது. இக்கிராமதில் உள்ளவர்களின் ஆதரவுகளும் மிகுந்த ஒத்துழைப்புகளும் மிக இருந்துள்ளார்கள். இக்கட்டடம் வேலைப்பாடுகள் பல வருடங்கள் கடக்கவில்லை. ஒருசில மாதங்களுக்குள் இக் கட்டிடம் ஓர் பிரபல்யமான நிலயமாக காட்சியழித்தது.

இந் நிலயத்தின்முன் திரையிலே பல வர்ணங்களால் சிறப்பட்டு, திருமகள் சன சமூக நிலையம், என்ற நாமத்துடன் பிரகாசித்தது..............

1957ம் ஆண்டு 9ம் மார்தம் 15ம் திகதி இந் நிலயத் திறப்புவிழாக் கொண்டாடப்பட்டது. இச் சிறிலங்கா நாட்டின் உயர் நீதிமன்ற நீதியரசர்களில் ஒருவருமான

மதிப்புக்குரிய நீதியரசர் திரு. பொன். ஸ்ரீஸ்கந்தராசா அவர்களால் இந் நிலையம் திறந்து வைக்கப்பட்டது. இவ் விழாவுக்கு இக் கிராமத்தில் உள்ளவர்கள் மட்டுமல்ல அயல் கிராமத்தில் உள்ளவர்களும் யாழ் நகர மாவட்ட உயர் அதிகாரிகள் சிலரும் வருகை தந்து இக் கிராமத்தின் முன்னேற்றத்துக்கு வாழ்த்துரை வழங்கினார்கள். இந்த நிலையம் ஆரம்பித்து இன்று இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவு விழா நடைபெற உள்ளது.

இந்த 25-ம் ஆண்டுகளுக்குள் இந்த நிலையம் எத்தனையோ விழாக்களைக் கண்டு கொண்டது.

முக்கியமாக இந்தக் கிராமத்தில் பொது நிகழ்ச்சிகளோ பொது செயல்களோ சகல நிகழ்ச்சிகளும் உதவியாக இருக்கின்றன இந்த கிராமத்து வாசிகள் மட்டுமல்ல சகல கிராமத்து வாசிகள், மாணவர்கள் பெரியோர்கள் எல்லோருக்கும் ஒரு பொழுது போக்குக் கும் நாட்டு நடைமுறைகள், உலக அறிவு நலன்கள் மாணவர்களின் உலக அறிவு நலன்கள் மாணவர்களின் கல்வியறிவின் ஆதாரங்கள் இப்படியான எல்லா பொது நிலைக்கும் இந்த நிலையம் மிக உதவியாக இருக்கின்றன, இக் கிராமத்தில் இந்த சனசமூக கல்வி நிலையம் ஆரம்பித்தகாலம் தொடர்ந்து ஆண்டு தோறும் இக் கிராமத்தில் உள்ளவர்களே ஒவ் வொருவர் இன் நிலைய தலைவர் களாகவும் தொண்டர்களாகவும் இருந்துவருகிறார்கள் இப் பெருந் தலைவர்கள் ஒவ்வொருவரும், இக் கிராமத்தின் எதிர்கால நலன்களைக் கருதி தங்களின் ஒவ்வொரு நேரத்தையும் வீணுக்காமல் தங்களை இந் நிலையத்துக்கே அர்ப்பணித்து நிலையத்தின் சார்பாக இக்கிராமத்துக்கே சேவகர்களாக இருந்து வருகிறார்கள்.

கடந்த சில ஆண்டுகளாக யாழ் நகர கிராமப்புற சனசமூக நிலைய மத்தியிலே தெல்லியூர் கிராமத்து திருமகள் சனசமூக நிலையமும் ஓர் பிரகாசமான நாமத்துடன் ஒலிக்கின்றன. இதற்குக் காரணம் விளையாட்டுத்துறை ஆம் அயல் கிராமங்களிலே அமைந்துள்ள சில சனசமூக நிலையத்தின் பெயரால் அக்கிராமம் பேரும் புகழும் கொண்ட முன்னேற்றப்பாதையிலே நிகழ்கின்றன. இதற்குக் காரணம் விளையாட்டு நிகழ்ச்சிகள் ஒவ்வொரு கிராமங்களின் வளர்ச்சியையும் முன்னேறும் வழிவகைகளையும் அறிந்த இக் கிராமத்தின் சில தலைவர்கள் அதாவது மதிப்புக்குரிய திரு. க. திசைவீரசிங்கம் அவர்கள் (அரசாங்க வைத்தியசாலை பிரபல மக்கள் சேவகர் திரு. அரிச்சந்திரா உரக் கூட்டுத்தாபனம் திரு. கி. கனகநாயகம் (தொலை பேசி இலாகா) திரு. ந. சத்திவேல் கிராமப்புற ஓர் சிறந்த வைத்தியரும் கிராமத்து தொண்டர் தலைவரும், திரு. அ. ஜெயக் குமார் விளையாட்டு ஓர் மாணவத் தலைவர், திரு. த. குணரத்தினம் பிரபல வர்த்தகர். ஓர் சமூகத் தொண்டன், இவர்களும் இன்னும் சில மாணவர்களும் சேர்ந்து இக் கிராமத் தில் விளையாட்டு நிகழ்ச்சிகளை நிறுவ வேண்டும் இதன் பலனாக இக்கிராமம் மேலும் வளர்ச்சியடைய மிக வழிகள் உண்டு என்பதை உணர்த்தினார்கள்.

இக் கிராமத்து மக்களோ அதற்கு மிக ஆதரவாக வழி காட்டினார்கள் திரு மகள் சனசமூக கல்வி நிலைய சார்பாக திருமகள் சனசமூக விளையாட்டுக் கழகம் என்ற நாமத்தில் இக்கிராம மக்கள் விளையாட்டு கழகத்தையும் ஆரம்பித்து வைத்தார்கள். இக் கிராமத்து விளையாட்டுக் கழகம் யாழ் நகரத்தில் சகல கிராமத்து விளையாட்டு கழகங்களுடன் ஒருசில போட்டிகளில் பங்குபெற்று அப்போட்டிகளில் எதிர்த்து போட்டி இட்டு சில போட்டிகளில் முதல் இடத்தைப்பெற்று சில பரிசில்களையும் பெற்றுள்ளது. இந்த சிறப்பு இந்தக் கிராமத்தின் திருமகள் சனசமூக நிலையத்துக்கே உள்ளது.

இக் கிராமத்தில் அமைந்துள்ள இந்த நூல் நிலையத்தின் ஆதரவால் இக் கிராமம் படிப்படியா ஓர் முன்னேற்றப் பாதையாக வளர்ந்து கொண்டே இருக்கின்றன. இக் கிராமத்து மாணவர்கள் இன் நூல் நிலையத்தின் சார்பாக மேலும் பல பல விளை யாட்டுத் துறைகளில் ஈடுபட்டு இக் கிராமத்தின் வளர்ச்சியை மேலும் பலப்படுத்த

முடியாத அளவுக்கு இக்கிராமத்தில் ஒரு குறைபாடு அதாவது இக் கிராம மாணவர்களுக்கு விளையாட்டு மைதானம் இக் குறைபாடு இங்குள்ள எல்லா மாணவர்களுடைய மனதிலும் வளர்ந்து வந்தது. ஆனாலும் இக் கிராமத்து விளையாட்டு மைதானம் இல்லாத குறையை போக்க ஒருவர் முன்வந்தார்.

அதாவது இக் கிராமத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவரும் கொழும்புமா நகரிலே பிரபல்யமான வர்த்தகத்துறை ஸ்தாபகர்களின் தலைவர்களில் ஒருவரும் சிந்தனைச்சிற்பச் செல்வர் சமாதான நீதிவான் அவர்களுகியமா கொடைவள்ளல் அமரர் S. T சின்னத்துரை அவர்களின் மூத்த புத்திரர் பிரபல சட்டதாரணியாகவும் இலங்கை வீட்மைப்பு திணைக்களக இயக்குநகர்களில் ஒருவரும் சமாதான நீதிவான் திரு. சி. சுந்தரலிங்கம் J. P. U. M. அவர்கள் தன் பிறந்த கிராமமாகிய இக்கிராமத்தின் வளர்ச்சிக்கு பற்று குறையாக இருந்துவந்த இந்த விளையாட்டு மைதானக் குறையை அவர் தன் சொந்த முயற்சியால் அரசாங்க ஆதரவு மூலமாக ஓர் விளையாட்டு மைதானத்தை நன்கொடையாக பெற்றுக்கொடுக்க உதவியுள்ளார். நூற்றுக்கு எண்பது வீதம் இந்த விளையாட்டு மைதானம் இக் கிராமத்துக்கு கிடைத்ததற்குச் சமனாக அமைந்துள்ளது.

மேலும் இக்கிராமத்தின் பெரியோர்கள் சிறியோர்கள் தலைவர்கள் தொண்டர்கள் எல்லோரினதும் இக் கிராமத்தின் மேல் உள்ள அன்பினால் இக் கிராமம் படிப்படியாக மேலும் மேலும் வளர்ந்து கொண்டே இருக்கின்றன.

இன்று இருபத்தைந்தாம், ஆண்டு நிறைவு விழா இன்று பட்டுமல்ல என்றும் இருபத்தைந்து கோடி ஆண்டுகள் இருபத்தைந்து நிறைவாண்டுகளாக அமைய வேண்டும் என்பதே இச் சிந்தனையாளரின் வேண்டுதல்.

வணக்கம்,

தெல்லியூர் சிந்தனையாளன்,

எஸ். எஸ். ஆனந்தே என்ற செல்லப்பா சிவானந்தம்

# எமது செயற்குழு உறுப்பினர்

# 1980



இருப்பவர்கள் இடமிருந்து வலம் :

கு. மயில்வாகனம் (பொருளாளர்) டாக்டர் நா. சக்திவேல் (கௌரவ செயலாளர்)
பொ. தங்கராசா (தலைவர்) நா. வேலாயுதபிள்ளை (உப தலைவர்)

நிற்பவர்கள் :

அ. குணரத்தினம், ந. செல்லச்சந்திரன், பொ. சிவகுமார்,
வ. நித்தியானந்தம், அ. இராசையா

படத்தில் இல்லாதவர் :

இ. கனகநாயகம்,

*With the Best Compliments*

*from*

# YARL MOTORS STORES

108/3, STANLEY ROAD,

JAFFNA.

*Telephone :* 7752

*Telegrams :* 'Yarlmoto'

எமது நல்லாசிகள்

★

## குமார் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ்

பருத்தித்துறை வீதி,
மயிலிட்டி.

*உரிமையாளர் :*
மு. யோகராசா

திருமகள் சனசமூக நிலைய
வெள்ளி விழா சிறப்புற
எமது வாழ்த்துக்கள்

## கண்ணன் மில்ஸ்

மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

With the Best Compliments

from

# Leyden Traders

188/3, HOSPITAL ROAD,

JAFFNA.

Telephone: 8162

*With the Best Compliments*

*of*

# JUPITER STORES

**355, OLD MOOR STREET,**

**COLOMBO - 12.**

*With Best Compliments of*

★

# S.A. CHELLIAH & CO.

114, 4th Cross Street,
Colombo-11.

❁ தரமான வீட்டுப் பாவனைப் பொருட்கள்

❁ கட்டிட உபகரணங்கள்

❁ பெயின்ட் வகைகள்

❁ விவசாய உபகரணங்கள்

❁ மற்றும் சகல இரும்பு கம்பி பூட்டு பிணைச்சல்

முதலியவற்றிற்கு

தரமான ஸ்தாபனம் பைப் வகைகள் தங்கள் திருப்திக்கு
ஏற்ற வகையில் பொருத்திக் கொடுப்பவர்கள்.

# ஈஸ்வரி ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்

## EESWARY HARDWARE STORES

காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

K. K. S. ROAD
CHUNNAKAM.

தொலைபேசி : 348

உ
சிவமயம்

# NAGA PAPER TRADERS

Dealers in :
PAPER, STATIONERY PRINTING ITEMS ETC.

T'phone: 36213

103, New Moor Street,
Colombo 12.

---

## நாகா பேப்பர் ட்ரேடர்ஸ்

10, புதிய சோனகத் தெரு,
கொழும்பு 12.

தொலைபேசி : 36315

உ
சிவமயம்

*With*

*Best*

*Compliments*

*of*

# KARUNA
# SOAP INDUSTRIES

200, SEA BEACH ROAD,

COLOMBO-11.

Telephone : 22944

திருமகள் சன சமூக நிலைய வெள்ளி விழா
இனிது நிறை வேற வாழ்த்துகிறோம்

# இரத்தின ஸ்ரோர்ஸ்

130, மலே வீதி, – கொழும்பு 2.

தொலைபேசி : 34877

திருமகள் சனசமூக நிலையம் ஆரம்பித்த காலம் தொட்டு
முக்கிய பதவி வகித்தோர் விபரம்

| | தலைவர் | கௌரவ செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|
| 1956 | திரு. வி. இராசா | திரு. ஐ. விஜயநாயகம் | திரு. மு. ஐயாக்குட்டி |
| 1957 | திரு. வி. இராசா | திரு. த. நடராசா | திரு. மு. ஐயாக்குட்டி |
| 1958 | திரு. வி. இராசா | திரு. த. நடராசா | திரு. நா. வேலாயுதபிள்ளை |
| 1959 | திரு. வி. இராசா | திரு. த. நடராசா | திரு. நா. வேலாயுதபிள்ளை |
| 1960 | திரு. வி. இராசா | திரு. த. நடராசா | திரு. கு. நமசிவாயகம் |
| 1961 | திரு. கா. கிருஸ்ணர் | திரு. க. திசைவீரசிங்கம் | திரு. கு. நமசிவாயகம் |
| 1962 | திரு. கா. கிருஸ்ணர் | திரு. க. திசைவீரசிங்கம் | திரு. இ. பொன்னுத்துரை |
| 1963 | திரு. கா. கிருஸ்ணர் | திரு. க. திசைவீரசிங்கம் | திரு. இ. பொன்னுத்துரை |
| 1964 | திரு. நா. சி. நாகலிங்கம் | திரு. க. திசைவீரசிங்கம் | திரு. இ. பொன்னுத்துரை |
| 1965 | திரு. நா. சி. நாகலிங்கம் | திரு. த. நடராசா | திரு. இ. பொன்னுத்துரை |
| 1966 | திரு நா. சி. நாகலிங்கம் | திரு. த. நடராசா | திரு. இ. பொன்னுத்துரை |
| 1967 | திரு. நா, சி. நாகலிங்கம் | திரு. த. நடராசா | திரு. இ. பொன்னுத்துரை |
| 1968 | திரு. நா. சி. நாகலிங்கம் | திரு. நா. ஆனந்தராசா | கலாநிதி நா. சத்திவேல் |
| 1969 | திரு. நா. சி. நாகலிங்கம் | திரு. நா. ஆனந்தராசா | கலாநிதி நா. சத்திவேல் |
| 1970 | திரு. நா. சி. நாகலிங்கம் | திரு. நா. ஆனந்தராசா | கலாநிதி நா. சத்திவேல் |
| 1971 | திரு.யோ.நே.பொன்னையா | திரு. கு. நமசிவாயகம் | கலாநிதி நா. சத்திவேல் |
| 1972 | திரு.யோ.நே.பொன்னையா | திரு. கு. நமசிவாயகம் | கலாநிதி நா. சத்திவேல் |
| 1973 | திரு. நா. சி. நாகலிங்கம் | திரு. கு. நமசிவாயகம் | கலாநிதி நா. சத்திவேல் |
| 1974 | திரு. நா. சி. நாகலிங்கம் | திரு. கு. வேல்சிவானந்தன் | திரு. த. அருளானந்தம் |
| 1975 | திரு. திசைவீரசிங்கம் . | திரு. த. அருளானந்தம் | கலாநிதி நா. சத்திவேல் |
| 1976 | திரு. திசைவீரசிங்கம் | திரு. பா. ஹரிச்சந்திரா | கலாநிதி நா. சத்திவேல் |
| 1977 | திரு. திசைவீரசிங்கம் | திரு. பா. ஹரிச்சந்திரா | திரு. நடராசா |
| 1978 | திரு. பொ. தங்கராசா | கலாநிதி நா. சத்திவேல் | திரு. வ. சுப்பிரமணியம் |
| 1979 | திரு. பொ. தங்கராசா | கலாநிதி நா. சத்திவேல் | திரு. கு. மயில்வாகனம்<br>திரு. த. தருமகுலசிங்கம் |
| 1980 | திரு. பொ. தங்கராசா | கலாநிதி நா. சத்திவேல் | திரு. கு. மயில்வாகனம் |
| 1981 | திரு. க. திசைவீரசிங்கம் | கலாநிதி நா. சத்திவேல் | திரு. பொ. சிவகுமார் |

# எமது நிலையத்திற்குச்

## சகல விதத்திலும் உதவி புரிந்தோர்

திரு. மு. ஐயாக்குட்டி அவர்கள்
- காணி நன்கொடை தந்து உதவியது.

திரு. நா. குமாரசாமி அவர்கள்
- கட்டிடம் நன்கொடையாகக் கட்டித்தந்து உதவியது.

திரு. இ. பொன்னுத்துரை அவர்கள்
- பாலர் கழகத் தளபாடங்கள் தந்து உதவியது.

திரு. மு. கார்த்திகேசு அவர்ககள்
- 1-ம் பிரிவு உதைபந்தாட்டச் சீருடை தந்து உதவியது.

திரு. வ. சிவசுப்பிரமணியம் அவர்கள்
- 3-ம் பிரிவு உதைபந்தாட்டச் சீருடை தந்து உதவியது.

★

## பத்திரிகை நன்கொடை வழங்கியோர்

திரு. இ. பொன்னுத்துரை அவர்கள்
திரு. த. குணரத்தினம் அவர்கள்
திரு. வ. சிவசுப்பிரமணியம் அவர்கள்
திரு. நா. கந்தசாமி அவர்கள்
திரு. இ. கனகநாயகம் அவர்கள்
திரு. மு. யோகராசா அவர்கள்
திரு. பா. ஹரிச்சந்திரா அவர்கள்
திரு. கு. நமசிவாயகம் அவர்கள்
திரு. சி. சுந்தரலிங்கம் அவர்கள் ச. நீ. ப. ம.

(சிலர் தொடர்ந்து வழங்கிவருகிறார்கள்)

*With the Best Compliments*

*of*

# AMENCO HARDWARE & GENERAL TRADERS

Dealers Hardware, Sanitaryware, Paints,
Drainage & Household Requisites etc.

**Wellawatta. 144, Galle Road,**
*Phone*: 86692 **Colombo 6.**

எமது உள்ளங்கனிந்த நல் வாழ்த்துக்கள்

# அமென்கோ ஹாட்வெயர் வர்த்தக நிறுவனம்

வெள்ளவத்தை, 144, காலி வீதி,
தொலைபேசி: 86692 கொழும்பு 6.

எமது நல்லாசிகள்

# அருள் சோப் இன்டஸ்ரீஸ்

194, சீ பீச் ரோட்,

கொழும்பு-11.

தொலைபேசி : 22944

எமது வாழ்த்துக்கள்

# எஸ். பி. சாமி அன் கோ.,

193, பவர் ஹவுஸ் வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 7025

# TRACMO LIMITED

5, Y. M. B. A. Road, GAMPAHA.
Phone :- 033 - 2145.

*Sole Importers of*

## EICHER TRACTORS

*Sub Dealer & Parts Stockist of*

## Sri Lanka State Trading Tractor Corporation

*for*

- *Messey Ferguson*
- Kubota
- Yanmar
- Iseki

*Authorised Dealer for*

## FORD TRACTORS

*Manufacturers of :*

- TRAILORS
- PLOVGING WHEELS
- RAKES
- VINOVING FANS Etc.

With the Best Compliments
from

# MANIAMS TEXTILES

No. 16, NEW MARKET,

JAFFNA.

*Telephone :* 7545

---

With the Best Compliments
from

# TRANSLANKA INVESTMENTS LTD.

771/1, GRAND BAZAAR,

JAFFNA.

***Telephone :* 7027-JA**

# நன்றி

"என் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய் நன்றி கொன்ற மகற்கு."

★ எமது நிலையமானது தனது வெள்ளி விழா நிகழ்ச்சிகளைச் சீராகவும் சிறப்பாகவும் நடாத்தி முடித்திருக்கின்றது. இது மற்றைய நிலையங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகவும் எமது பகுதிக்குப் பெருமையாகவும் அமைந்துள்ளது.

★ இப்பகுதியில் உள்ள எல்லோரும் ஒருமித்து ஒத்துழைப்புத்தந்து உதவியமை பாராட்டத்தக்கதொன்றாகும்.

★ நிகழ்ச்சிகளிலெல்லாவற்றிலும் பங்குபற்றிய அங்கத்தவர்கள் அனைவருக்கும் அன்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ நடைபெற்ற போட்டிகள் அத்தனைக்கும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றியவர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

★ எமது வெள்ளிவிழா மலருக்கு ஆசியுரைகள், கட்டுரைகள், விளம்பரங்கள், பரிசில்கள் தந்து உதவிய அத்தனை பேருக்கும் பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்

★ எமது செயற்குழு உறுப்பினர், கொழும்புக்கிளை உறுப்பினர், தத்தம் சிரமம் பாராது உரிய நேரத்தில் தேவையான உதவிகளைத் தந்துதவியதற்கு நன்றி.

★ எமது வெள்ளிவிழாச் சிறப்பு மலரைச் சிரமம் பாராது உரிய காலத்தில் சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்துதவிய நியூ லீலா அச்சகத்தினருக்கும் அன்பான நன்றி உரித்தாகுக.

நன்றி.

வணக்கம்

வைத்தியகலாநிதி நா. சத்திவேல்
கௌரவ செயலாளர்

you can depend on us


பொதுசன நூலகம்
வலிகாமம் வடக்கு பிரதேசசபை
தெல்லிப்பழை உப அலுவலகம்
இப் புத்தகம் கீழ்க் குறிக்கப்பட்டுள்ள திகதி அல்லது அதற்கு முன்னர் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். குறித்த தவணைக்குள் கொடுபடாத புத்தகம் ஒவ்வொன்றுக்கும் நாள் ஒன்றுக்கு 50 சதம் குற்றப்பணமாக அறவிடப்படும்.

| | | |
|---|---|---|
| 86 16/12/79 | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |



RKS

Branch:
147, K. K. S. Road,
MAVIDDAPURAM.
TELLIPPALAI.

ffice:
C. Perera Mawatha.
COLOMBO-13.
Telephone: 25933

*With the Best Compliments*

*from*

# GREENLAND HOTEL LTD.

**3 A, Shrubery Gardens**
**COLOMBO-4.**

Telephone: 85592 & 81986

தலை நகரில் சிறந்த சேவை போஜனத்துக்கும்
பாதுகாப்பான தங்கும் அறை வசதிகளும்
கொண்ட ஒரே ஒரு ஸ்தாபனம்

## கிறீன்லண்ட்ஸ் ஹோட்டல்

பம்பலப்பிட்டி

தொலைபேசி; 85592, 81986

நியூ லீலா அச்சகம், " சின்னத்துரை மாடிக்கட்டிடம் " 182, மெசஞ்சர் வீதி, கொழும்பு-12.